உ

சிவமயம்.

முருகன் துணை

திருத்தணிகை

விசாகப் பெருமாளையரவர்கள்

இயற்றிய

# யாப்பிலக்கணம்

யாழ்ப்பாணத்துப் புலோலி

வித்துவான்

திரு க. முருகேசபிள்ளையவர்கள்

பரிசோதித்துப் புதுக்கியது.

THE JAFFNA SENTHAMIL PATHIPPAKAM WORKS,

PULOLY SOUTH, POINT PEDRO, JAFFNA,

CEYLON.

*All Rights Reserved*] 1939 [Price A

Published by

**THE JAFFNA SENTHAMIL PATHIPPAKAM WORKS,**

PULOLY SOUTH, POINT PEDRO, JAFFNA,

CEYLON.

February 1939.

Sri Sanmuganatha Press, Jaffna.

"ஆதியிற் றமிழ்நா லகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ந் ஞானம் நலம்பெறற் பொருட்டே."

யாப்பிலக்கணம் கற்கப்புகும் ஆரம்ப மாணவர்களுக்கு முக்கியமான இச்சிறுநூல் திருத்தணிகை ஸ்ரீ விசாகப் பெருமாளையர் அவர்களாற் செய்யப்பட்டது. இந்நூல் செய்தற்கு யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கல விருத்தி தொல்—பொருள்—செய்யுளியல் ஆதிய நூல்களை ஆதாரமாகக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்நூலை இதற்கு முன்பும் பலரும் பதிப்பித்திருக்கின்றார்கள். ஆயினும் பழம் பதிப்புக் கிடைத்தற் கருமையாக இருப்பதாலும் மற்றைய பதிப்புகளிற் கருநாடக முறையும் திருத்தக் குறைவுகளும் பல பிழைகளும் இருப்பதாலும் இப்பதிப்பு வெளியிடவேண்டி நேர்ந்தது. இப்பதிப்பில் கற்கும் மாணவர்க்கு மிகவும் உபயோகமாகும் வண்ணம் பல சூத்திரங்களை வேறு நூல்களிலிருந்து உரிய இடங்களிற் சேர்த்துக் கூட்டியும் முன் கூறப்படாத சில விஷயங்களை விளக்கியும் உதாரணங்களைத் தொகுத்துமுள்ளேன். யாப்பருங்கலக்காரிகை முதலாம் நூல்கள் படிக்க விரும்புவோர்க்கு இந்நூல் ஒரு வழிகாட்டியாகவிருக்கும். தமியேன் மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சைக்குப் பாட ஆயத்தஞ் செய்த காலத்தும் பின்பு அண்ணாமலைச் சர்வகலாசாலையிற் கல்வி பயின்ற காலத்தும் இச்சிறு புத்தகத்தையும் இதனோடு சம்பந்தப்பட்ட மற்றைய சிறு தொகுதிகளையுஞ் சிறந்த முறையில் வெளிப்படுத்த வேண்டுமென்ற அவாவினாற் றூண்டப்பட்டுள்

ளேன். தமிழன்பர்களில் என் நண்பர் பலரும் வற்புறுத்தினர். ஆதலின் இதை வெளியிட முன்வந்தேன். இதிற் றவறுகள் காணப்படின் அன்புடனறிவித்தால் ஏற்றுக்கொள்ளுவேன். என் தமிழ்த் தொண்டையும் தமிழுலகு அன்புடனேற்று ஆதரிக்குமென நம்புகிறேன். அறிவிற் சிறியேனாகிய யான் இக்காரியத்திலீடுபட்டது அறியாமையென்பது வெளிப்படை. குற்றங் கடிந்து குணபலைந்து கொள்ளுதல் கற்றறிந்த மாந்தர்க்குக் கடனுமன்றோ.

யாழ்ப்பாணத்துப் புலோலி,
வெகுதானிய ஆண்டு,
1938

க. முருகேசபிள்ளை.

# நூலாசிரியர் வரலாறு.

தென்னிந்தியாவில் மிகச் சிறப்புவாய்ந்து விளங்கும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தலங்களுள் ஒன்றாகிய திருத்தணிகைப்பதியகத்துப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், வீரசைவ குலத்திற் றோன்றி, கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்து, சைவ மடங்களிற் சிறப்புவாய்ந்த திருவாவடுதுறை யாதீனத்து வித்துவானாகிய மாதவயோகச் சிவஞான முனிவர் அவர்களின் மாணவரும் தணிகைப்புராண மாதிய நூல்களினாசிரியருமான ஸ்ரீ கச்சியப்ப முனிவரிடத்தில் இலக்கண இலக்கியங் கற்று ஆராய்வு மிகவுடைய கந்தப்பையர் என்னுந் திருநாம முடையார் ஒருவரிருந்தனர். அவரில்லற மேற்கொண்டு நல்லறம் புரிந்து சில வருடமாகியும் மகப்பேறடையாது மனமிக மாழ்கி, தன மனைவி தெய்வயானை யம்மையோடுடன் பிறந்த வள்ளியம்மையையும் மகப்பேறு கருதி மணந்தும பின்புஞ் சில வருடங்கள் சென்றும், இருவரிலொருவரிடத்தும் மகப்பேறு கைகூடாது மனக்கவலைக் கடலுளாழ்ந்து தமது சீடர்க்தக் தமிழ்க்கல்வி பயிற்றுவதிலேயே மனதைச் செலுத்தித் துணிவுகொண்டு காலங் கழிப்பாராயினர்.

இவரிங்ஙனமிருக்க, இவர் மனைவியரிருவரும் மிகவுங் கவலையுடையவராய் இல்லறத்துக்குரிய நல்லறங்கள் வழுவாமற் செய்திருந்தனர் ஒரு நாள் தணிகையம்பதிக் கருகிலுள்ள ஊருணியொன்றினின்று நீர் முகந்துவரச் செல்லுகையில் அவர் கட்புலனுக்குத் தோன்றிய திருவேங்கட மலையை நோக்கி, தணிகைவேந்தை வெறுத்தார்போன்று, "இச்செங்கல்வராயனுக்கும் எம மீது கருணையில்லைப்போலும, இனி வேங்கடத்திறைவனேனும் மக்களை யருளானோ" வெனச் சம்பாஷித்து, நம்மிடத்துக் குழந்தை யுதிப்பின் திருமாலின் திருநாமமே இடுதுமென்று உறுதிபூண்டு தம்மில்லையடைந்தனர். சின்னாட் சென்றபின் அவ்விரு சகோதரிகளுங் கருப்பவதிகளாய் முறையே ஒவ்வொரு ஆண்மகவைத் தமிழ்நாடு தழைத்தோங்கும வண்ணம் பெற்றெடுத்தனர். ஆட்பிள்ளைகளிருவரும் ஒருநாள் வித்தியாசத்தினால் தம்மில் மூத்தோரிளையோரெனப்பட்டனர். இவ்விரு சிறார்க்குந் தந்தை தமது மரபின்படி விசாகன் சரவணன் எனத் திருநாமமிடுதற்கு முன் வருகையில் அவர் மனைவியரிருவரும் திருப்பதிமலைகண்டு தாங்கள் தீர்மானித்ததை வெளியிட்டனர். ஐயரவர்கள் அதற்கிணங்கித் தாம் விரும்பிய திருநாமங்களுடன் பெருமாளென்பதைப் புணர்த்தினர். அதனால் விசாகப்பெருமாளையர், சரவணப்பெருமாளையரென நாமகரணஞ் செய்யலானார்.

இச்சகோதரரிருவரும் உரிய பருவத்தில் வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று மிகவும் ஒற்றுமையுடையவராய்த் தமது தந்தையாரிடம் பல நூல்களைக் கற்றுப் பின்னர் சென்னை நகரையடைந்து சஞ்சீவிராயன் பேட்டையில் வாழ்ந்திருந்த இலக்கணக் கடலென யாவரும் புகழும் இராமானுசக் கவிராயரிடமும் நன்னூல் முதலிய பன்னூல்களும் நலம்பெறப் பயின்று கற்றோர் மதிக்குங் கல்வி விற்பன்னராயினர். இவ்விருவருள் மூத்தோராகிய விசாகப் பெருமாளையரவர்கள் நெடுங்காலஞ் சென்னைச் சர்வகலாசங்கத்தில் தமிழ்ப்புலமை நடாத்தி வந்தனர். இளையோராகிய சரவணப் பெருமாளையர் பல மாணவர்க்குப் பாடஞ் சொல்லி வந்தனர். இவரிருவருஞ் சேர்ந்து தமிழுலகிற்குப் பெரிதும் நலம் புரிந்துள்ளார்கள். இவர்கள் செய்த பெருநலன்களை அளவிட முடியாது. இவரிருவருக்குந் தமிழ்நாடு கடமைப்பட்டுள்ளது. திருக்குறள், நைடதம், பிரபுலிங்கலீலை முதலிய நூல்களுக்கு உரை செய்தனர். நன்னூலுக்கு முதன்முதற் காண்டிகையுரை செய்தவர் விசாகப் பெருமாளையரென்பது ஞாபகத்தில் வைக்கத்தக்கது. இவருரை வெளிப்பட்ட பின்புதான் இவராசிரியர் இராமானுச காண்டிகையும் வெளிப்பட்டது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் வெளியிட்ட காண்டிகையுரை மிகச்சிறந்தது. இலக்கணச் சுருக்க வினாவிடையும் பாலபோத இலக்கணமும் இவராற் செய்யப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இலக்கணச் சுருக்க வினாவிடை மிகவும் விரிவுடையது. எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் எடுத்துச் சொல்லுவது. இந்நூல் மூத்தோர்பெயரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதற்கு இளையோராற் சிறப்புப்பாயிரங் கொடுக்கப்பட்டுள்ளது.

இவரிடத்துக் கல்விகற்றவர் பலருள்ளும் ஈக்காடு சச்சிதானந்தம் பிள்ளையவர்களும் ஒருவராவர். இவர் மிகப் பாண்டித்தியமுடையவர் பல நூல்களுக்கு உரை செய்தவர். இவ்வரலாறு எழுதுதற்கு ஆதாரமாக இருந்தது இவரின் சுருக்க வெளியீடாகும். அத்துடன் தமியேன் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்துக் கல்விபயின்றகாலத்தில் இவ்விஷயம் பற்றிப் பல பேராசிரியரிடமுங் கேட்ட உறுதிமொழிகளும் உபகாரமாயிற்று. நூலாசிரியர்சரிதந் தெரிந்தவரையிற்றிருத்தமுற வரையப்பட்டது.

யாழ்ப்பாணத்துப் புலோலி,
வெகுதானிய வருடம்,
1938.

க. முருகேசபிள்ளை.

# யாப்பிலக்கணம்.

## உள்ளுறை.

### 1. உறுப்பியல்.


| | | | |
|---|---|---|---|
| எழுத்து | ௨ | தொடை | |
| அசை | ௨ | எதுகைத்தொடை | ௧௩ |
| நேரசை | ௨ | மோனைத்தொடை | ௧௪ |
| நிரையசை | ௩ | இணைமோனை | ௧௫ |
| சீர் | ௩ | பொழிப்புமோனை | ௧௬ |
| ஓரசைச்சீர் | ௩ | ஒரூஉமோனை | ௧௬ |
| ஈரசைச்சீர் | ௪ | கூழைமோனை | ௧௬ |
| மூவசைச்சீர் | ௫ | மேற்கதுவாய் மோனை | ௧௬ |
| நாலசைச்சீர் | ௭ | கீழ்க்கதுவாய்மோனை | ௧௬ |
| தளை | ௮ | முற்றுமோனை | ௧௬ |
| நேரொன்றாசிரியத்தளை | ௯ | இயைபுத்தொடை | ௧௭ |
| நிரையொன்றாசிரியத்தளை | ௯ | எதுகைத்தொடை | ௧௮ |
| வெண்சீர்வெண்டளை | ௧௦ | முரண்தொடை | ௧௮ |
| இயற்சீர்வெண்டளை | ௧௦ | அளபெடைத்தொடை | ௧௯ |
| ஒன்றியவஞ்சித்தளை | ௧௦ | செந்தொடை | ௨௦ |
| ஒன்றாவஞ்சித்தளை | ௧௦ | அந்தாதித்தொடை | ௨௦ |
| கலித்தளை | ௧௧ | இரட்டைத்தொடை. | ௨௦ |
| அடி | ௧௧ | | |
| குறளடி, சிந்தடி, அளவடி, (நேரடி) நெடிலடி, கழிநெடிலடி | ௧௨ | | |


### 2. செய்யுளியல்.


| | | | |
|---|---|---|---|
| பா | ௨௧ | வெண்பாவினம் | ௨௮ |
| பாவினம் | ௨௨ | குறள்வெண் செந்துறை | ௨௯ |
| வெண்பா | ௨௨ | குறட்டாழிசை | ௨௯ |
| குறள் வெண்பா | ௨௩ | வெண்டாழிசை | ௩௦ |
| நேரிசை வெண்பா | ௨௪ | வெண்டுறை | ௩௧ |
| இன்னிசை வெண்பா | ௨௫ | வெளி விருத்தம் | ௩௨ |
| சிந்தியல் வெண்பா | ௨௭ | அகவற்பா | ௩௩ |
| பஃறொடை வெண்பா | ௨௮ | நேரிசையாசிரியப்பா | ௩௪. |

இணைக்குறளாசிரியப்பா ௩௫
நிலைமண்டிலவாசிரியப்பா ௩௫
அடிமறிமண்டிலவாசிரியப்பா
அகவற் பாவினம் ௩௬
ஆசிரியத்தாழிசை ௩௬
ஆசிரியத்துறை ௩௭
ஆசிரியவிருத்தம் ௩௮
கலிப்பா ௪௦
ஒத்தாழிசைக் கலிப்பா ௪௧
வண்ணகவொத்தாழிசை ௪௧
அம்போதரங்கவொத்தாழிசை
நேரிசையொத்தாழிசை ௪௫
வெண்கலிப்பா ௪௬
கலிவெண்பா ௪௬
கொச்சகக்கலிப்பா ௪௭
தரவுகொச்சகம் ௪௭
தரவிணைக்கொச்சகம் ௪௭
சிஃறாழிசைக்கொச்சகம் ௪௮
பஃறாழிசைக்கொச்சகம் ௪௯
மயங்கிசைக்கொச்சகம் ௫௦
கலிப்பாவினம் ௫௩
கலித்தாழிசை ௫௩
கலித்துறை ௫௫
கலிவிருத்தம் ௫௫
கட்டளைக்கலிப்பா ௫௬
கட்டளைக்கலித்துறை ௫௬
வஞ்சிப்பா ௫௭
குறளடிவஞ்சிப்பா ௫௮
சிந்தடிவஞ்சிப்பா ௫௮
வஞ்சியினம் ௫௯
வஞ்சித்தாழிசை ௫௯
வஞ்சித்துறை ௫௯
வஞ்சிவிருத்தம் ௬௦
மருட்பா ௬௦
புறநிலைவாழ்த்து ௬௦
கைக்கிளை ௬௧
வாயுறைவாழ்த்து ௬௧
செவியறிவுறூஉ ௬௨
தாழ்பா ௬௨


## 3. ஒழிபியல்.


கலிப்பா ௬௩
ஆசிரியப்பா ௬௪
முரண்தொடை ௬௪
கடைமுரண் ௬௪
கடையிணைமுரண் ௬௪
பின்முரண் ௬௫
கடைக்கூழைமுரண் ௬௫
இடைப்புணர்முரண் ௬௬
மோனை ௬௬
எதுகை ௬௬
கூன் ௬௭


உ

சிவமயம்.

முருகன் துணை.

# யாப்பிலக்கணம்.

## க. உறுப்பியல்.

**1.** யாப்பென்பது யாது?

சொல்லிலக்கணத்திற் கூறிய பல சொற்களாலும் பொருட்கு இடனாகச் சுற்று வல்ல புலவரால் அணிபெறப் பாடப்படுவதாம்.

யாப்பு, பாட்டு, தூக்கு, தொடர்பு, செய்யுள் என்பன ஒரு பொருட் சொற்கள்.

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்."

(என்பது சூத்திரம்.)

**2.** அஃது எத்தனை வகைப்படும்?

பாவும் பாவினமுமென இருவகைப்படும்.

**3.** இவ்விரண்டிற்கும் உறுப்பாய் வருவன யாவை?

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறும் இவற்றிற்கு உறுப்பாம்.

"எழுத்தசை சீர்தளை யடிதொடை யாகிய
வாறு முறுப்பெனக் கூறுவர் புலவர்."

(எ-து, சூ-ம்.)

## 1 எழுத்து.

**4.** எழுத்துக்களென்பன யாவை?

எழுத்திலக்கணத்திற் கூறிய முதல் சார்பென்னும் இருவகை எழுத்துக்களுமாம்.

"முதல்சார் பெனவிரு வகையே யெழுத்தாம்".
(எ-து, சூ-ம்)

செய்யுளடிக்கு எழுத்து எண்ணுங்கால் மெய்க ளெண்ணப்படுவதில்லை. தளை சிதைய வருமிடத்துக் குற்றியலிகர உகரங்களும் அளபெடையும் தள்ளுண்டுபோம்.

## 2. அசை.

**5.** அசை என்பது யாது?

எழுத்துக்களால் ஆக்கப்பட்டுச் சீர்க்கு உறுப்பாய் வருவதாம்.

**6.** அவ்வசை எத்தனை வகைப்படும்?

நேரசை, நிரையசை யென இருவகைப்படும்.

"நேரசை நிரையசை யெனவிரு வகைமே".
(எ-து, சூ-ம்)

### i. நேரசை.

**7.** நேரசைகளென்பன யாவை?

குறிலேனும் நெடிலேனும் தனித்து வரினும் அல்லது ஒற்றடுத்து வரினும் நேரசைகளாம்.

(உதாரணம்.)

ஆழி; சொல்வான்.

1. ஆ — நெடிலாலாய நேரசை.
2. ழி — குறிலாலாய நேரசை.
3. சொல்— குறிலொற்றடுத்தாய நேரசை.
4. வான் — நெடிலொற்றடுத்தாய நேரசை.



அ — அவன் என்பதுபோல விட்டிசைத்த வழியல்லது தனிக்குறில் மொழிக்கு முதலில் நேரசை ஆகாது.

### ii. நிரையசை.

**8.** நிரையசைகளென்பன யாவை?

குறிலிணையேனும் குறிநெடிலேனும் தனித்தும் அல்லது ஒற்றடுத்தும் வருவனவாம்.

(உ-ம்) அணி — அணில்; குரா — குரால்.
பணி — பணில்; மரா — வரால்.

1. அணி — குறிலிணையாலான நிரையசை.
2. அணில் — குறிலிணையொற்றடுத்தாய நிரையசை.
3. குரா — குறினெடிலாலாய நிரையசை.
4. குரால் — குறினெடிலொற்றெடுத்தாய நிரையசை.

பிறவுமன்ன.

## 3. சீர்.

**9.** சீரேன்பது யாது?

அவ்வசை சிறுபான்மை தனித்தும் பெரும்பாலும் இரண்டு முதலியவாகத் தொடர்ந்தும் வருவதாம்.

**10.** அச்சீர் எத்தனை வகைப்படும்?

ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீரென நான்கு வகைப்படும்.

"ஓரசை யீரசை மூவசை நான்கசை
யெனநால் வகைய சீரின் முறையே"
(எ-து, சூ-ம்)

### i. ஓரசைச்சீர்.

**11.** ஓரசைச் சீர்களென்பன யாவை?

தனித்து வரும் நேரசையும் நிரையசையுமாகிய இரண்டுமாம்.

இவற்றிற்கு உதாரண வாய்பாடு :

நேர் — நாள். நிரை — மலர்.

இவை பெரும்பாலும் வெண்பாவினீற்றிலுஞ் சிறுபான்மை ஒழிந்தவற்றுள்ளும் வரும்.

(உ-ம்.) "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்." (௩)

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழா அ ரெனின்." (௨)

இக்குறள் வெண்பாக்களின் இறுதியில் வார் — நாள், ரெனின் — மலர் என ஓரசைச்சீரிரண்டும் வந்தன காண்க.

## ii. ஈரசைச்சீர்.

**12.** ஈரசைச் சீர்களென்பன யாவை?

நேர் நேர் — நிரை நேர் — நிரை நிரை — நேர் நிரை என இரண்டசை கூடி வருதலாலாகிய சீர் நான்குமாம்.

இவற்றிற்கு உதாரண வாய்பாடு :

1. நேர் நேர் — தேமா.
2. நிரை நேர் — புளிமா.
3. நிரை நிரை — கருவிளம்.
4. நேர் நிரை — கூவிளம்.

இந்நான்கும் அகவற்கே உரியவாய் இயற்சீரெனவும், அகவற்சீரெனவும் பெயர் பெறும்.

(உ-ம்) "வேதப் பொருளாய் விளங்கிய சங்கரன்
பாதத் துணைமனம் பற்றுவோர்
போதத் தொளிர்நலம் பொருந்திவாழ் குவரே." (௫)



இவ்வகவலுள் —

வேதப் — தேமா — நேர்நேர்.
பொருளாய் — புளிமா — நிரைநேர்.
விளங்கிய — கருவிளம் — நிரைநிரை.
சங்கரன் — கூவிளம் — நேர்நிரை. என

ஈரசைச்சீர் நான்கும் வந்தன காண்க. பிறவுமன்ன.

## iii. மூவசைச்சீர்.

**13.** மூவசைச் சீர்களென்பன யாவை?

மேற் சொல்லப்பட்ட நேர்நேர் முதலிய நான்கன் இறுதியிலும் நேரசையும் நிரையசையுந் தனித்தனி கூடி வருதலாகிய எட்டுச் சீர்களுமாம்.

இவற்றிற்கு உதாரண வாய்பாடு :

1. நேர் நேர் நேர் — தேமாங்காய்.
2. நிரை நேர் நேர் — புளிமாங்காய்.
3. நிரை நிரை நேர் — கருவிளங்காய்.
4. நேர் நிரை நேர் — கூவிளங்காய்.

இந்நான்கு காய்ச்சீர்களும் வெண்பாவிற்கே சிறப்பாக உரியவாய் வெண்சீரெனப்படும்,

1. நேர் நேர் நிரை — தேமாங்கனி.
2. நிரை நேர் நிரை — புளிமாங்கனி.
3. நிரை நிரை நிரை — கருவிளங்கனி.
4. நேர் நிரை நிரை — கூவிளங்கனி.

இந்நான்கு கனிச்சீர்களும் வஞ்சிப்பாவிற்கே சிறப்பாக உரியவாய் வஞ்சிச்சீரெனப் பெயர்பெறும்,

முறையே உதாரணம்:

"ஆனந்தக் கூத்த னடிக்கன்பு செய்மனனே
யீனந் தனையொழிவா யின்று" (௬)

இக்குறள் வெண்பாவினுள் —

ஆனந்தக் —தேமாங்காய் —நேர் நேர் நேர்.
கூத்த —(தேமா) —நேர் நேர்.
னடிக்கன்பு —புளிமாங்காய் —நிரை நேர் நேர்.
செய்மனனே —கூவிளங்காய் —நேர் நிரை நேர்.
யீனந் —(தேமா.) —நேர் நேர்.
தனையொழிவா —கருவிளங்காய் —நிரை நிரை நேர்.
யின்று —காசு.

எனக் காய்ச்சீர் நான்கும் வந்தன காண்க. இக்குறள் வெண்பாவில் வந்த சீர்களெல்லாம் வெண்சீரென்று கொள்ளற்க. கூத்த, ஈனம் என்பன அகவற்சீர். யின்று என்பது அசைச்சீர். மற்றையவைகளே ஈங்கு உதாரணமாகக் கருதப்பட்ட வெண்சீர்கள்.

"மண்ணீரனல் வளிவானுடு
வெண்ணீர்மதி வெங்கதிருயிர்
எண்ணீடுரு வியைபசுபதி
நாளும்
என்மன மிடங்கொண் டுறைதலால்
வன்மனக் கொடியர்சொற் கிலேமயங் குதலே." (நு)

இவ் வஞ்சிப்பாவினுள்—

மண்ணீரனல் —தேமாங்கனி —நேர் நேர் நிரை
வளிவானுடு —புளிமாங்கனி —நிரை நேர் நிரை
வெண்ணீர்மதி—தேமாங்கனி —நேர் நேர் நிரை
வெங்கதிருயிர் —கூவிளங்கனி —நேர் நிரை நிரை
எண்ணீடுரு —தேமாங்கனி—நேர் நேர் நிரை
வியைபசுபதி —கருவிளங்கனி—நிரை நிரை நிரை

எனக் கனிச்சீர் நான்கும் வந்தன காண்க. இவ்வஞ்சிப்பாவில் வந்த சீர்களெல்லாங் கனிச்சீர்களே.



## iv. நாலசைச்சீர்.

**14. நாலசைச்சீர்களென்பன யாவை?**

மூவசைச்சீர் எட்டனிறுதியினும் நேரசையும் நிரையசையுந் தனித்தனி அடுத்து வருதலாலாகிய சீர் பதினாறுமாம்.

இவற்றிந்து உதாரண வாய்பாடு:

### தண்பூ.

1. தேமாந்தண்பூ = நேர் நேர் நேர் நேர்.
2. புளிமாந்தண்பூ = நிரை நேர் நேர் நேர்
3. கருவிளந்தண்பூ = நிரை நிரை நேர் நே
4. கூவிளந்தண்பூ = நேர் நிரை நேர் நேர்.

### நறும்பூ.

1. தேமாநறும்பூ = நேர் நேர் நிரை நேர்.
2. புளிமாநறும்பூ = நிரை நேர் நிரை நேர்.
3. கருவிளநறும்பூ = நிரை நிரை நிரை நேர்.
4. கூவிளநறு[illegible] = நேர் நிரை நிரை நேர்.

### தண்ணிழல்.

1. தேமாந்தண்ணிழல் = நேர் நேர் நேர் நிரை.
2. புளிமாந்தண்ணிழல் = நிரை நேர் நேர் நிரை.
3. கருவிளந்தண்ணிழல் = நிரை நிரை நேர் நிரை.
4. கூவிளந்தண்ணிழல் = நேர் நிரை நேர் நிரை.

### நறுநிழல்.

1. தேமாநறுநிழல் = நேர் நேர் நிரை நிரை.
2. புளிமாநறுநிழல் = நிரை நேர் நிரை நிரை.
3. கருவிளநறுநிழல் = நிரை நிரை நிரை நிரை.
4. கூவிளநறுநிழல் = நேர் நிரை நிரை நிரை.

என வரும்.

இவை வெண்பாவினுள் வருவன அல்ல. கலியினுள்ளும் அகவலுள்ளும் பெரும்பாலுங் குற்றியலுகரம் வந்தவிடத்தன்றி வரமாட்டா. வஞ்சிப்பாவினுட் பெரும்பாலும் வரவும் ஓரடியுள் இரண்டு நாலசைச்சீர் கண்ணுற்று நிற்கவும் பெறும்.

(உ-ம்.) "அள்ளற்பள்ளத் தகன்சோணுட்டு
வேங்கைவாயில் வியன்குன்றூரன்". (சு)

இவ்வஞ்சி யடியில் இரண்டு நாலசைச் சீர் வந்தன காண்க. இவ்வஞ்சி யடியிலே வந்த சீர்களெல்லாம் நாலசைச் சீராய் நின்ற பொதுச்சீர்களேயாம்.

அள்ளற்பள்ளத் — தேமாந்தண்பூ — நேர் நேர் நேர் நேர்
தகன்சோணுட்டு — புளிமாந்தண்பூ— நிரை நேர் நேர் நேர்
வேங்கைவாயில் — தேமாந்தண்பூ — நேர் நேர் நேர் நேர்
வியன்குன்றூரன் — புளிமாந்தண்பூ— நிரை நேர் நேர் நேர்

இவ்வஞ்சிப்பாவின் எஞ்சியபாகங் கிடைக்கவில்லை. இது வேறு சீர் விரவாமல் அடிமுழுதும் நாலசைச்சீர் வருதற்குக் காட்டிய உதாரணமென்று கருதப்படுகிறது.

## 4. தளை.

**15.** தளையென்பது யாது?

நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றியேனும் ஒன்றாதேனுங் கூடி நிற்பதாம்.

நேர்முன் நேரும் நிரைமுன் நிரையும் வருதல் ஒன்றி வருதலாம். அவ்வாறன்றி 'நேர்முன் நிரையும் நிரைமுன் நேரும் வருதல் ஒன்றாது வருதலாம்.

**16.** அத்தளை எத்தனை வகைப்படும்?



(1) நேரொன்றாசிரியத்தளை, (2) நிரையொன்றாசிரியத்தளை, (3) இயற்சீர் வெண்டளை, (4) வெண்சீர் வெண்டளை, (5) ஒன்றிய வஞ்சித்தளை, (6) ஒன்றா வஞ்சித்தளை, (7) கலித்தளை என எழுவகைப்படும்.

"நேரே நிரையே யியற்சீர் வெண்சீர்
ஒன்றிய வஞ்சி யொன்றா வஞ்சி
கலித்தளை யெனத்தளை யேழா கும்மே" (எ-து. சூ-ம்)

**17.** அவை எவ்வாறு வருவனவாம்?

### i. நேரொன்றாசிரியத்தளை.

மாமுன்* நேர் வருவது. நாள் முன் நேர்வருவதும் அது.

### ii. நிரையொன்றாசிரியத்தளை.

விளமுன் நிரை வருவது. மலர்முன் நிரை வருவதும் அது. இவ்விருதளைகளும் ஆசிரியப்பாவிலேயே சிறப்பாக வரும.

### நேரிசை யாசிரியப்பா.

(உ-ம்) "தேனூர் கஞ்சச் செம்ம லாதி
வானோர் மாதர் மங்கலங் களத்திடை
வலியொடு நிலைபெற மலிபெருங் கருணையின்
அலைதரு மிருள்விட மணிவிடற் றிருத்தும்
தில்லையுட் சிவபிரான் றிருவடி
ஒல்லையிற் பரசுநர்க் குயர்கதி யெளிதே." (எ)

இவ்வகவலுள் தேனூர்+கஞ் என மாமுன் நேர் வருதலால் இது நேரொன்றாசிரியத்தளையாம். மங்கலங்+களத் என விளமுன் நிரை வருதலால் இது நிரையொன்றாசிரியத்தளையாம்.

---

* முன் என்றது இடமுன்னை.

### iii. இயற்சீர் வெண்டளை.

மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவன. நாள்முன் நிரைவருவதும் மலர்முன் நேர்வருவதும் அது.

### iv. வெண்சீர் வெண்டளை,

காய்முன் நேர் வருவது. பூமுன் நேர் வருவதும் அது.

### நேரிசை வெண்பா.

(உ-ம்) "பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியி னிழுதாவ ரென்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்."

இந்நேரிசை வெண்பாவினுள் பெரியவர்தந் + நோய் எனக் காய்முன் நேர்வருதலால் இது வெண்சீர் வெண்டளையாம். நோய்போற் + பிறர் என மாமுன் நிரைவருதலால் இஃது இயற்சீர் வெண்டளையாம். பிறவுமன்ன.

### v. ஒன்றிய வஞ்சித்தளை,

கனிமுன் நிரை வருவது. நிழல்முன் நிரை வருவதும் அது.

### vi. ஒன்றா வஞ்சித்தளை.

கனி முன் நேர் வருவது. நிழல்முன் நேர் வருவதும் அது.

### வஞ்சிப்பா.

(உ-ம்.) 'மண்ணீரல் வளிவாரனொடு
வெண்ணீர்மதி வெங்கதிருயிர்
எண்ணீடுரு வினையபசுபதி
நாளும்
என்மன மிடங்கொண் டுறைதலால்
வன்மனக் கொடியர்சொற் கிலைமயங்குதலே." (௯)

இவ்வஞ்சிப்பாவினுள் மண்ணீரனல் + வளி எனக் கனிமுன் நிரை வருதலால் இஃது ஒன்றிய வஞ்சித்தளையாம். வளிவாரனொடு + வெண் எனக் கனிமுன் நேர் வருதலால் இஃது ஒன்றா வஞ்சித்தளையாம். பிறவுமன்ன.



### vii. கலித்தளை.

காய்முன் நிரை வருவது. பூமுன் நிரை வருவதும் அது.

### கொச்சகக் கலிப்பா.

(உ-ம்) "அஞ்சம்போ னடையுமையா ளகங்களிப்பச் சுரர்பரவ
நெஞ்சஞ்சேர் தருமன்பி னெறிமுனிவர் கரங்குவிப்ப
விஞ்சுஞ்சீர்த் தனித்தில்லை வியன்பொதுவி னடமாடும்
கஞ்சந்தாழ் திருவடிகள் கருதிமட னொழிநெஞ்சே." (௧0)

இக்கொச்சகக் கலிப்பாவினுள் அஞ்சம்போ + னடை எனக்காய் முன் நிரை வருதலால் இது கலித்தளையாம். பிறவுமன்ன.

## 5. அடி.

**18.** அடியென்பது யாது?

மேற்சொல்லப்பட்ட தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவதாம்.

**19.** அவ்வடி எத்தனைவகைப்படும்?

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

**20.** அவை எவ்வாறு வரும்?

(1) குறளடி—இருசீரான் வருவது.

(உ-ம்) "பேரறி வன்னன்
சார விருந்த
ஆரினு மில்லென்
றூர விகழ்ந்தே." எனவரும் (கக)

(2) சிந்தடி—முச்சீரான் வருவது.

(உ-ம்) 'சாந்த னேதிய தாழ்மொழி
காய்ந்த வேலிரு காதிலும்
போந்த போன்று புகுந்திட
மாந்த ராகுல மன்னினர்." எனவரும். (கஉ)

(3) அளவடி அல்லது நேரடி—நாற்சீரான் வருவது.

(உ-ம்) "வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலி
னெய்தலி னெண்சுட ராழியி னன்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னன்முன்
நீதலை சென்றுரை நீள்கடை காப்போய்" (கங)
எனவரும்

(4) நெடிலடி—ஐஞ்சீரான் வருவது.

(உ-ம்) "யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே."
எனவரும் (கச)

(5) கழிநெடிலடி—ஐந்துசீர்க்கு மேற்பட்டு வருவன வெல்லாங் கொள்க.



இவற்றிற்கு உதாரணம் ஆசிரியவிருத்தத்திற்கு உதாரணங் கூறியவிடத்துக் காட்டிய அறுசீர், எழுசீர், எண்சீர், ஒன்பதின் சீர், ஒன்பதின் மிக்க சீர் விருத்தங்களைக் கொள்க.

## 6. தொடை.

**21.** தொடை என்பது யாது?

பல அடிகளிலேனும் பல சீர்களிலேனும் எழுத்துக்கள் ஒன்றிவருவதாம்.

**22.** அத்தொடை எத்தனை வகைப்படும்?

எதுகைத்தொடையும் மோனைத்தொடையுமென இருவகைப்படும்.

### i. எதுகைத்தொடை.

**23.** எதுகைத் தொடை என்பது யாது?

அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்ப இரண்டாம் எழுத்து ஒன்றிவருவதாம்.

இன்னிசை வெண்பா.

(உ-ம்) "துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்காற் போல வரும்." (க௫)

இவ்வின்னிசை வெண்பாவினுள் இரண்டாமெழுத்து ஒன்றிவருதல் காண்க. அன்றியும்

ஆசிரிய விருத்தம்.

"சோங்போர் புரிவர் நான்மறையா
றங்க முணர்ந்த தொழுகுலத்தோர்

விற்போர் புரிவர் நெடியசிலை
யிராம னனைய விறல் வேந்தர்
பொற்போர் புரிவர் பிறர் பொருளுந்
தமபோற் பேணிப் புரிவணிகர்
நெற்போர் புரிவ ரந்நகரில்
வேளாண் குலத்து நெறியினரே" (கரு)

என "போ" என்னும் மூன்று மெழுத்து முதலியன ஒத்து வருதலுங் கொள்க. ஒரோவிடத்து ஓரடியுள்ளுஞ் சீர்களின் இரண்டாமெழுத்து ஒன்றி

"பொன்னி னன்ன பொறிசுணங் கேந்தி." (கரு)

என வருதலுமுண்டு.

சிறுபான்மை வருக்க வெழுத்தும், நெட்டெழுத்தும், இனவெழுத்தும், பிறவும் எதுகையாக வரப்பெறும்.

(உ-ம்) "வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று." (கஅ)

இது வருக்க எதுகை.

"ஆவாவென் றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூவென் றே கூவிளிகொண்டா ரொருசாரார்."

இது நெடிலெதுகை.

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்." (உ0)

இது வல்லின எதுகை.

## ii. மோனைத்தொடை.

**24.** மோனைத்தொடை என்பது யாது?

முதற் சீரின் முதலெழுத்தோடு பின்வருஞ் சீர்களில் ஒன்றனுள்ளேனும் பலவற்றினுள்ளேனும் முதலெழுத்து ஒன்றி வருவதாம்.



### கலிவிருத்தம்.

(உ-ம்.) கற்றன கல்வியுந் திருவு மாற்றலுந்
தற்றெறு மறலியைத் தடுப்ப வல்லவா
முற்றொருங் குணர்பசு பதியை முன்னுறா
துற்றநா ளொழித்திடு முணர்வி லிக்கரோ." (உக)

இச்செய்யுளின் முதலாமடியில்—ககரமும்,
இரண்டாமடியில்—தகரமும்,
மூன்றாமடியில்—முகரமும்,
நான்காமடியில்—உகரமும் மோனையாக வந்தன.

அன்றியும்,

அ—ஆ—ஐ—ஔ

என்னும் இந்நான்கும் ஒன்றற்கொன்று மோனையாம்.

இ—ஈ—எ—ஏ

என்னும் இந்நான்கும் ஒன்றற்கொன்று மோனையாம்.

உ—ஊ—ஒ—ஓ

என்னும் இந்நான்கும் ஒன்றற்கொன்று மோனையாம்.

ஞ—ந வும், ம—வ வும், த—ச வும்
ஒன்றற்கொன்று மோனையாம்.

(உ-ம்.) "அடல்வேண்டு மைந்தின் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு." (உஉ)

இதன் முதலடியில் ஆகரத்திற்கு ஐகாரம் மோனையாயிற்று. மோனை, அனு என்பன ஒரு பொருட் சொற்கள்.

### மோனை விகற்பம்.

**1.** இணை மோனை என்பது யாது?

முதலிரு சீர்க்கண்ணும் மோனை வரத் தொடுப்பது இணைமோனை எனப்படும்.

**2. பொழிப்பு மோனை என்பது யாது?**

முதற்சீர்க்கண்ணும் மூன்றாஞ்சீர்க்கண்ணும் மோனை வரத் தொடுப்பது பொழிப்பு மோனை எனப்படும்.

**3. ஒரூஉ மோனை என்பது யாது?**

நடுவிரு சீர்க்கண்ணுமின்றி முதற்சீர்க்கண்ணும் இறுதிச் சீர்க்கண்ணும் மோனைவரத் தொடுப்பது ஒரூஉ மோனை எனப்படும்.

**4. கூழை மோனை என்பது யாது?**

இறுதிச்சீர்க்கண்ணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனைவரத் தொடுப்பது கூழை மோனை எனப்படும்.

**5. மேற்கதுவாய் மோனை என்பது யாது?**

மூதலயற் சீர்க்கண்ணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனைவரத் தொடுப்பது மேற்கதுவாய் மோனை எனப்படும்.

**6. கீழ்க்கதுவாய் மோனை என்பது யாது?**

ஈற்றயற் சீர்க்கண்ணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனைவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் மோனை எனப்படும்.

**7. முற்று மோனை என்பது யாது?**

எல்லாச் சீர்க்கண்ணும் மோனைவரத் தொடுப்பது முற்றுமோனை எனப்படும். இவற்றிற்கு உதாரணம் ஒரு செய்யுளிற் காட்டுதும்.

### நேரிசை யாசிரியப்பா.

(உ-ம்)

"அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி (இணைமோனை.)
அரிக்குரற் கிங்கிணி யாற்றுஞ் சீறடி (பொழிப்புமோனை.)



அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி (ஒரூஉமோனை.)
அகன்ற வல்கு லந்நுண் மருங்குல் (கூழைமோனை.)
அரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோள் (மேற்கதுவாய்மோனை)
அவிர்மதி யனைய திருநுத லரிவை (கீழ்க்கதுவாய்மோனை.)
அயில்வே லனுக்கி யம்பலத் தமர்ந்த (முற்றுமோனை.)
கருங்கய னெடுங்க ணோக்கமென்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே." (உரு)

இதனுள் இணைமோனை முதலிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க. இவையன்றி அடிதோறும் முதற்கண் அகரம் நின்று ஒன்றலால் அடி மோனைத் தொடையும் அமைந்திருத்தலறிக.

**8. வேறு தொடைகளுமுண்டோ? அவை யாவை?**

உண்டு. அவையாவன:

1. இயைபுத் தொடை
2. எதுகைத் தொடை
3. முரண் டொடை
4. அளபெடைத் தொடை என்பனவாம்.

## i. இயைபுத்தொடை விகற்பத்திற்கு உதாரணம்.

### ஆசிரியம்.

"மொய்த்தடன் றவழு முகிலே பொழிலே (இணையியைபு)
மற்றத னயலே முத்துறழ் மணலே (பொழிப்பியைபு.)
நிழலே யினியத னயலது கடலே (ஒரூஉவியைபு.)
மாதர் நகிலே வல்லே யியலே (கூழையியைபு.)
வில்லே நுதலே வேற்கண் கயலே (மேற்கதுவாயியைபு.)
பல்லே தளவம் பாலே சொல்லே (கீழ்க்கதுவாயியைபு.)
புயலே குழலே மயிலே யியலே (முற்றியைபு.)

அதனால்,

"இவ்வயி னிவ்வுரு வியங்கலின்
எவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே." (உ௪)

இவ்வகவற் பாவிலே இணையியைபு முதலிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க. இயைபு கொள்ளுதல் இறுதியை முதலாகக்கொண்டு இணையியைபு முதலியனவாகக் கொள்ளல்வேண்டும். இவையன்றி அடிதோறும் முதற்கண் (இறுதிக்கண்) ஓரெழுத்தே வந்து ஒன்றலால் அடியியைபுத் தொடையும் அமைந்திருத்தலறிக.

## ii. எதுகைத்தொடை விகற்பத்திற்கு உதாரணம்.

### நேரிசை யாசிரியம்.

'பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப் (இணையெதுகை.)
பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி (பொழிப்பெதுக.)
மின்னவி ரொழிவடந் தாங்கி மன்னிய (ஒரூஉவெதுகை)
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி (கூழையெதுகை)
என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை (மேற்கதுவாயெதுகை.)
அன்ன மென்படை போலப் பன்மலர்க் (கீழ்க்கதுவாயெதுகை)
கன்னியும் புன்னை யின்னிழற் றுன்னிய (முற்றெதுகை.)
மயிலேய் சாயலவ் வாணுதல்
அயில்வே லுண்கணெம் மறிவு தொலைத்தவே." (உரு)

இதனுள் இணையெதுகை முதலிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க. இவையன்றி அடியெதுகைத் தொடையும் அமைந்திருத்தலறிக.

## iii. முரண்டொடை விகற்பத்திற்கு உதாரணம்.

### நேரிசை யாசிரியம்.

"சீறடிப் பேரக லல்கு லொல்குபு (இணைமுரண்)
குறுகிய மருங்கிற் பெருகு வடந்தாங்கிக் (பொழிப்புமுரண்.)



குவிந்து சுணங்கரும் பியகோங்கை விரிந்து (ஒரூஉமுரண்.)
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன் (கூழைமுரண்.)
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும் (மேற்கதுவாய்முரண்.)
இருக்கையு நிலையு மேக்செழி லியக்கமும் (கீழ்க்கதுவாய்முரண்)
துவர்வாய்த் தீஞ்சொலு மூவந்தென முனியா (முற்றுமுரண்.)
தென்று மின்னண மாகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோரே." (உசு)

இதனுள் இணைமுரண் முதலிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க. இவையன்றி அடிமுரண்டொடையு மமைந்திருத்தலறிக.

## iv. அளபெடைத் தொடை விகற்பத்திற்கு உதாரணம்.

### நேரிசை யாசிரியம்.

"தாஅட் டாஅ மரைமல ருழக்கிப் (இணையளபெடை)
பூஉக் குவளை போஒ தருந்திக் (பொழிப்பளபெடை)
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய் (ஒரூஉஅளபெடை)
மாஅத் தாஅண் மோஒட் டெருமை (கூழையளபெடை)
தேஎம் புனலிடைச் சோஒர் பாஅல் (மேற்கதுவாயளபெடை.)
மீஇ ஞாஅர்ந் துகளுஞ் சீஇர் (கீழ்க்கதுவாயளபெடை.)
ஆஅ ஞஅ நீஇ ணீஇர் (முற்றளபெடை.)
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோழிக் கலரா னவே." (உஎ)

இதனுள் இணையளபெடை முதலிய ஏழு விகற்பமும் வந்தவாறு கண்டுகொள்க. இவையன்றி அடியளபெடையும் அமைந்திருத்தல் காண்க.

**25.** எதுகை மோனையின்றி வரும் பாட்டுக்களுமுளவோ?

அவ்வாறு வரும் பாட்டுக்களுஞ் சில உளவாம்.

### நேரிசை யாசிரியம்.

(உ-ம்.) "பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே." எனவரும்.

இப்படி எதுகை மோனையின்றி வருவனவற்றைச் செந்தொடை யென்பர் யாப்பருங்கலக்காரிகைகாரர். இவையன்றி அந்தாதித்தொடை, இரட்டைத் தொடைகளும் உண்டு.

### அந்தாதித்தொடை.

அந்தமாய் நிற்கும் எழுத்து, அசை, சீர் முதலியன ஆதியுமாய் நின்று தம்முள் ஒன்றத் தொடுக்கப்படுந் தொடை அந்தாதித்தொடை எனப்படும்.

(உ-ம்.) "உலகுடன் விளக்கு மொளிதிக ளவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவன் } அடியந்தாதி
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனை }
அறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விணமிசை யுலகே." (௨௯)

இதனுள், ஆசனத்திருந்த + ஆசனத்திருந்த என்பது அடியந்தாதி. உலகே + உலகுடன் என்பது மண்டலவடியந்தாதி. மற்ற எழுத்து அந்தாதி முதலியவற்றைக் கண்டு கொள்க.

### இரட்டைத்தொடை

அடியின் முதலில் வந்த மொழிதானே அந்த அடி முழுதுந் தொடுக்கப்பட்டு வருவது இரட்டைத்தொடை எனப்படும்.



(உ-ம்.) "ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி யொக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவி னிறம்" (௩௦)

இதனுள், முதலடியிலே முன்வந்த சொல்லே முழுதும் வந்ததைக் காண்க.

இவற்றின் விரிவுகளெல்லாவற்றையும் யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி, தொல்காப்பியச்செய்யுளியல், செய்யுள்நூல், சிதம்பரச்செய்யுள் கோவை முதலாம் நூல்களிற் கண்டு தெரிந்துகொள்க.

உறுப்பியல் முற்றிற்று.

---

## ௨. செய்யுளியல்.

**26.** பா வென்பது யாது?

இரண்டு முதலிய அடிகளால் ஆக்கப்பட்டு வெண்பா முதலிய பெயர்பெற்று வருவதாம்.

**27.** அப் பா எத்தனைவகைப்படும்?

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நான்கனோடு மருட்பா, தூற்பா, என்னும் இரண்டுங்கூடி அறுவகைப்படும்.

"வெண்பா அகவல் கலியே வஞ்சி
ஆகிய நான்கும் முறைசிறந் தனவே
மருட்பா தூற்பா விரண்டுங் கூட்டி
அறுவகை யென்பர் நெறியறிந் தோரே"
(ஏ-து. சூ-ம்.)

## பாவினம்.

**28.** அந் நான்கு பாவிற்கும் வரும் இனங்கள் யாவை?

இனம் தாழிசை, துறை, விருத்தம் என ஒவ்வொன்றற்கும் தனித்தனி மும்மூன்றாம்.

## 1. வெண்பா.

**29.** வெண்பாவின் இலக்கணம் என்னை?

வெண்பா—ஈற்றடி முச்சீரடியாகவும், ஏனையடி நாற்சீரடியாகவும் பெற்று, காய்ச்சீரும் அகவற்சீரும், வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையுங்கொண்டு மற்றைச் சீருந்தளையும் பெறாது செப்பலோசை யுடைத்தாய்க் காசு—பிறப்பு—நாள்—மலர் என்னும் வாய்பாட்டின் ஒன்று கொண்டு முடிவது பொதுவிலக்கணமாம்.

"ஈற்றடி முச்சீ ராக முடிந்தும்
ஏனைய வடிகள் நாற்சீர் பெற்றும்
இயற்சீர் காய்ச்சீர் எட்டுணை பிழையாது
வெண்சீர் இயற்சீர் வெண்டளை கொண்டும்
செப்பலி சையிற் றப்புத லின்றி
ஏனைய சீர்தளை யியன்றிடப் பெறாது
காசே நாளே மலரே பிறப்பே
எனுவாய் பாட்டி னொன்றன் முடிவது
வெண்பா விலக்கண மெனவேண் டினரே.

எ-து சூ-ம்.

வெண்பா ஓசை செப்பலோசை யெனப்படும்.

"செப்ப லிசையன வெண்பா மற்றவை
அச்சடி சிந்தடி யாகலு மவ்வடி
அந்தம் அசைச்சீ ராகவும் பெறுமே."



செப்பலோசை: ஏந்திசைச் செப்பல், தூங்கிசைச் செப்பல், ஒழுகிசைச்செப்பல் என மூன்றுவகையாம். இவற்றுள்

"வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
ஏந்திசைச் செப்ப லென்மனார் புலவர்"

(உ-ம்): "யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு" (௩௧)

"இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்ப லென்மனார் புலவர்"

(உ-ம்) "இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு." (௩௨)

"வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே யொழுகிசைச் செப்பல்"

(உ-ம்) "கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு." (௩௩)

**30.** அவ்வெண்பா எத்தனைவகைப்படும்?

குறள்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல்வெண்பா, பஃறொடைவெண்பா என ஐந்துவகைப்படும்.

"குறளே நேரிசை இன்னிசை சிந்தியல்
பஃறொடை யாமென வெண்பா வைந்தே"

(எ-து சூ-ம்.)

## 1 குறள்வெண்பா.

**31** குறள்வெண்பா எவ்வாறுவரும்?

இரண்டடியாய் ஒருவிகற்பத்தாலேனும் இருவிகற்பத்தாலேனும் வரும்.

"ஈரடி கொண்டு விகற்ப மிரண்டாயு
முடியு மாமென மொழிந்தனர் புலவர்" (எ-து சூ-ம்.)

## (1) ஒரு விகற்பக்குறள்வெண்பா.

(உ-ம்) "உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்."

இஃதொரு விகற்பக்குறள்வெண்பா (தவர்) மலர் என்னும் வாய்ப்பாட்டான் முடிந்தது.

## (2) இருவிகற்பக்குறள்வெண்பா.

(உ-ம்) "கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கில்லை
வெல் கூற்றின் றேற்றங் கொளல்."

இஃதிருவிகற்பக்குறள் வெண்பா மேற்படிவாய் பாட்டான் முடிந்தது.

# 2. நேரிசைவெண்பா.

**32.** நேரிசை வெண்பா எவ்வாறு வரும்?

நான்கடியாய் இரண்டாமடியிறுதிச்சீர் முதற்றொடைக்கேற்ற தனிச்சொல்லாய்வர அடிமுழுவதும் ஓர் எதுகையாகவேனும், முன்னிரண்டடி ஓர் எதுகையாகவேனும் பின்னிரண்டடி மற்றோர் எதுகையாகவேனும் வரும்.

"நேரிசை வெண்பா நான்கடி கொண்டு
இரண்டா மடியிற் றனிச்சொற் பெற்றும்
ஒருவிகற் பாகியு மிருவிகற் பாகியும்
வருமென வேண்டினர் வண்டமிழ்ப் புலவர்"
(எ-து. சூ-ம்)



## (1) ஒருவிகற்ப நேரிசைவெண்பா.

(உ-ம்) "கூற்றங் குமைத்த குரைகழற்காற் கும்பிட்டுத்
தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற்—சீற்றஞ்செய்
யேற்றினான் றில்லை யிடத்தினா னென்னினியாம்
போற்றினா னல்கும் பொருள்" (கசு)

இஃது ஒரு விகற்ப நேரிசை வெண்பா மலர் என்னும் வாய்பாட்டான் முடிந்தது.

## (2) இருவிகற்ப நேரிசை வெண்பா.

(உ-ம்) "ஒற்றைப்புள் ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்பிடந்தா
னீற்றா னிழன்மணி வண்ணத்தான்—கூற்றொருபான்
மங்கையான் பூமகளான் வார்சடையா னீண்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு." (கஎ)

இஃதிருவிகற்ப நேரிசைவெண்பா காசு என்னும்வாய்பாட்டான் முடிந்தது.

# 3. இன்னிசைவெண்பா.

**33.** இன்னிசைவெண்பா எவ்வாறு வரும்?

ஒருவிகற்பத்தாலேனும் பலவிகற்பத்தாலேனும் நான்கடியாய்த் தனிச்சொல்லின்றி வரும்.

"நான்கடி பெற்றுத் தனிச்சொல் லின்றி
ஒருவிகற் பாகியும் பலவிகற் பாகியும்
நேரிசை வெண்பா வியலிற் றிரிந்தும்
வருவன வெல்லா மின்னிசை வெண்பா."
(எ-து. சூ-ம்.)

## 1. ஒருவிகற்ப இன்னிசைவெண்பா.

(உ-ம்) "துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்." (கூஅ)

இது தனிச்சொல்லின்றி ஒருவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பா.

## 2. பலவிகற்ப இன்னிசைவெண்பா.

(உ-ம்) "கடற்குட்டம் போழ்வார் கலவர்† படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமி
றவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும்." (கூகூ)

இது தனிச்சொல்லின்றிப் பலவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பா. அன்றியும்,

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை—மழையும்
தவமிலா ரில்வழி யில்லைத்—தவமு
மரசிய லில்வழி யில்லை—யரசனு
மில்வாழ்வா ரில்வழி யில்." (சo)

என அடிதோறும் தனிச்சொற்பெற்று வருவதும்

"காதன் மகளிர் கலக்கக் கலக்குண்டு
பேதுற்றார் நெஞ்சும் பிழைத்தகன்றார் நன்னெஞ்சும்
போதம் படரும் புலியூரே—தாதுண்டு
வண்டுறங்கு நீள்சடையோன் வைப்பு." (சக)

என மூன்றாமடியிறுதி தனிச்சொற்பெற்று வருவதும்,

†போல்வார் கயவர் என்றும் பாடம்.



"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமருந்து
தேய்வ ரொருமா சுறின்." (சஉ)

என இரண்டாமடியிறுதி தனிச்சொற்பெற்று மூன்று விகற்பத்தான் வருவதும், பிறவாறு நேரிசைவெண்பாவிற் சிறிது வேறுபட்டு* வருவனவும் இன்னிசை வெண்பாவாம்.

## 4. சிந்தியல்வெண்பா.

**34 சிந்தியல்வெண்பா எவ்வாறு வரும்?**

மூன்றடியாய் (1) நேரிசைவெண்பாவைப்போல வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பாவென்றும், (2) இன்னிசை வெண்பாவைப்போல வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பாவென்றும் பெயர்பெற்று வரும்.

"மூன்றடி பெற்று நேரிசை போன்று
தனிச்சொற் பெற்றல் நேரிசைச் சிந்தியல்
இன்னிசை போன்று தனிச்சொற் பெறவிடில்
இன்னிசைச் சிந்தியல் வெண்பா முறையென
அறைந்தனர் தொன்னூ லறிவுடை யோரே."
(எ-து. சூ-ம்.)

## (1) நேரிசைச் சிந்தியல் வெண்பா.

(உ-ம்) "அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செவ்வ னுரைப்பச்—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு"

இது நேரிசைச் சிந்தியல் வெண்பா. (சங)

*வேறுபடுதலென்றது பலவிகற்பத்தால் வருதலை.

## (2) இன்னிசைச் சிந்தியல்வெண்பா.

(உ-ம்) "போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றங் குமைக்க வருமுன் னமரங்கா
ளேற்றுகந்தான் பொற்று ளிணை" (சச)

இஃதின்னிசைச் சிந்தியல்வெண்பா.

## 5. பஃறொடை வெண்பா.

**35**. பஃறொடைவெண்பா எவ்வாறு வரும்?

நான்கடியின் மிக்க பலவடிபெற்றுவரும்.

'வெண்பாச் சீர்தளை மிகவும் விரவி
நான்கடி யின்மிகு பலவடி யாலும்
பஃறொடை வெண்பா நடக்கு மென்றநரே."
(எ·து சூ-ம்.

(உ-ம்.) "வையக மெல்லாங் கழனியா வையகத்துட்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்துள்
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டிற் றலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்" (சரு)

இஃதேழடிப் பல விகற்பப் பஃறொடை வெண்பா.

## வெண்பாவினம்.

**36**. குறள்வெண்பாவிற்கு இனம் யாவை?

(1) குறள் வெண்செந்துறையும் (2) குறட்டாழிசையும் இனமாம்.



"குறள்வெண் செந்துறையுங் குறட்டா ழிசையுங்
குறள்வெண்பா வினமெனக் கூறி வைத்தனரே"
(எ·து சூ-ம்.)

## (1) குறள் வெண்செந்துறை.

**37**. குறள்வெண்செந்துறை எவ்வாறு வரும்?

விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடையதாகி எனைத்துச் சீரானும் அளவொத்த இரண்டடியாய் வரும்.

'எனைத்துச் சீரா னளவொத் திரண்டடி
விழுமிய பொருளு மொழுகிய வோசையும்
நிரம்பி முடியின் குறள்வெண் செந்துறை'
(எ·து, சூ-ம் )

(உ-ம்) "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை" (சகூ)

## (2) குறட்டாழிசை.

**38**. குறட்டாழிசை எப்படி வரும்?

(1) நாற்சீரின் மிக்க பல சீரான் வரும் அடி இரண்டாய் ஈற்றடி குறைந்து வருவனவும் (2) விழுமிய பொருளும் ஒழுகிய வோசையுமின்றிக் குறள்வெண்செந்துறையிற் சிதைந்து வருவனவும் (3) வேற்றுத்தளை விரவிய குறள் வெண்பாவுமென மூன்றுவகைப்பட்டு வரும்.

"நாற்சீ ரின்மிகு பலசீர் கொண்டு
அடியிரண் டாகி யீற்றடி குறைந்தும்
ஒழுகிய வோசையும் விழுமிய பொருளும்
இன்றிக் குறள்வெண் செந் துறையிற் சிதைந்தும்
வேற்றுத் தளைவிரவிய குறள்வெண் பாவுமென
மூவகை யென்று மறைவதத் தனரே." (எ·து சூ-ம்.)

(உ-ம்)(1) "நண்ணு வார்வினை நைய நாடொறு நற்ற வர்க்கர சாய [ஞானநற்
கண்ணி னானடி யேயடை வார்கள் கற்றவரே" (௪௭)

[இது முதலடி பல சீரான்மிக்கு ஈற்றடிகுறைந்து வந்தது] எனவும்,

(2) "அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வையி னீரே." (௪௮)

[இஃது அளவொத்து இறுதிவாய்ப்பாட்டின் வெண்டளை பெற்றுவந்தது] எனவும்,

(3) "வண்டார் பூங்கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி." (௪௯)

[இது வேற்றுத்தளை விரவியது] எனவும் வரும்.

## i. வெண்டாழிசை.

**39.** வெண்பாவினம் மூன்றனுள் வெண்டாழிசை யெவ்வாறு வரும்?

(1) மூன்றடியாய் முதலிரண்டடியும் நாற்சீராயும் ஈற்றடியொன்றும் வெண்பாவைப்போல முச்சீராயும் முடிவு பெற்று வேற்றுத்தளை விரவி வருவனவும், (2) சிந்தியல் வெண்பா ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருவனவு மென இருவகைப்பட்டு வரும்.

"மூன்றடி யாகி முதலிரண் டடியும்
நாற்சீ ராகி யிறுதியடி யொன்றும்
வெண்பா வைப்போல் முச்சீர்த் தாகி
வேற்றுத் தளைகள் விரவி வருநவும்
சிந்தியல் வெண்பா வொருபொருண் மேன்மூன்
றடுக்கி வருநவு மறிந்த வெண்டாழிசை
இலக்கண மென்றனர் கலக்கமில் புலவர்."
(எ-து. சூ-ம்.)



(உ-ம்) (1) "நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யா
ரன்பு வேண்டு பவர்." (௫0)

இது மூன்றடியால் வந்த வெண்டாழிசை.

(2) "அம்பேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
கொம்பே றுடையான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வம்பே யிறந்து விடல்
வானோருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
நீணாகம் பூண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வீணே யிறந்து விடல்
கோளாருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
யாளாக வாண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வாளா விறந்து விடல்." (௫௧)

இது சிந்தியல் வெண்பா ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த வெள்ளைத்தாழிசை.

## 2. வெண்டுறை.

**40.** வெண்டுறை எவ்வாறு வரும்?

மூன்றடிமுதல் ஏழடியீறாகப் பின்பு நின்ற சிலவடிகளிற் சில சீர் குறைந்து வரும். இவற்றுள் எல்லா அடியும் ஓரோசையால் வருவனவன்றியும் முன்பிற் சிலவடிகளோரோசையாயும் பின்பிற் சிலவடிகள் மற்றோரோசையாயும் வருதலுமுண்டு.

"மூன்றடி முதலா யேழடி யிறுவாய்
பின்புறு சிலவடி சிலசீர் குறைந்தும்
எல்லா வடியு மோரோசை பெற்றும்
முன்னிற் சிலவடி யோரோசை யாயும்

பின்னிற் சிலவடி வேறோசை யாயும்
முடியு மென்பர் முடிபுணர்ந் தோரே.'
(எ-து. சூ-ம்)

(உ-ம்)
"படர்தருவெவ் வினைத்தொடர்பாற் பவத்தொடர்பப்
பவத்தொடர்பாற் படராநிற்கும்
விடலரும்வெவ் வினைத்தொடர்பவ் வினைத்தொடர்புக்
*கொழிபுண்டோ வினையேற்கம்மா
விடர்பெரிது முடையேன்மற் றென்செய்கே னென்செய்கே
னடலரவ மரைக்கசைத்த வடிகேளோ வடிகேளோ." (௫௨)

இது நான்கடியாய்ப் பின் இரண்டடி இருசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

"கூற்றிருக்கு மடலாழிக் குரிசின்முத லோரிறைஞ்சக்
கொழுந்தேன் பில்கி
யூற்றிருக்குந் தில்லைவனத் தசும்பிருக்கும் பசும்பொன்மன் றத்
தொருதா ளூன்றி
வண்டுபா டச்சுடர் மகுடமா டப்பிறைத்
துண்டமா டப்புலித் தோலுமா டப்பணி
ரண்டமா டக்குழைந் தகிலமா டக்கருங்
கொண்டலோ டுங்குழற் கோதையோ டுங்கறைக்
கண்டனா டுந்திறங் காண்மினோ காண்மினோ." (௫௩)

இஃது ஏழடி வேற்றொலி வெண்டுறை.

## 3. வெளி விருத்தம்.

### 41. வெளிவிருத்தம் எவ்வாறு வரும்?

மூன்றடியினாலேனும் நான்கடியினாலேனும் முற்றுப் பெற்று அடிதோறும் இறுதியில் ஒரு சொல்லையே தனிச் சொல்லாகக் கொண்டுவரும்.

*கழிபுண்டோ என்றும் பாடம்.



"மூன்றடி யாலும் நான்கடி யாலும்
முற்றுப் பெற்றிறு தியிலொரு சொல்லையே
தனிச்சொல் லாகக் கொண்டு வருமென
செய்யுளில் வல்லோர் செப்பினர் தாமே"
(எ-து. சூ-ம்)

(உ-ம்)
"அங்கட் கமலத் தலர்கமல மேயீரு—நீரே போலுங்
வெங்கட் சுடிகை விடவரவின் மேயீரு—நீரேபோலுங்
திங்கட் சடையீருந் தில்லைவனத் துள்ளீரே—நீரேபோலும்."

இது மூன்றடியால் வந்த வெளிவிருத்தம்.

"ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா—ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா—ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா—ரொருசாரார்
ஏகீர் நாகீ ரென்செய்து மென்றா—ரொருசாரார்." (௫௫)

இது நான்கடியால் வந்த வெளிவிருத்தம்.

## 2. அகவற்பா.

### 42. அகவற்பாவின் இலக்கணம் யாது?

அகவல்-நாற்சீரான் வரும் அளவடியதாகியும், இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும், தன்தளை தழுவியும், பிறர்தளை மயங்கியும், கருவிளங்கனி கூவிளங்கனியென்னும் இரு சீருங்கலவாது அகவலோசை உடைத்தாய் மூன்று முதலிய பல அடிகளால் வருவது அகவற்பா அனைத்திற்கும் பொதுவிலக்கணமாம்.

"நாற்சீர் கொண்ட வளவடி யாகியும்
இயற்சீர் பயின்று மயற்சீர் விரவியும்
தன்தளை தழுவியும் பிறதளை மயங்கியும்
வஞ்சிச் சீரிற் பின்னிரண்டு விரவாதும்

மூன்று முதலாப் பலவடி கொண்டு
அகவ லிசையிற் சுகமுற நடந்து
முடிவதே யகவல் முறையெனக் கூறுவர்.''(எ-து.சூ·ம்)

அகவலோசை.

''அகவ லிசையன வகவன் மற்றவை
ஏ,ஓ,ஈ,ஆ, என, ஐஎன் றிறுமே.''
(எ-து. சூ-ம்·)

அகவலோசையானது ஏந்திசையகவல், தூங்கிசையகவல், ஒழுகிசையகவல் என மூன்றாம். அவையாவன;-

''நேர்நேர் இயற்றளை யான்வரு மகவலும்
நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலும்
ஆயிரு தளையு மொத்தாகி யகவலும்
ஏந்த தூங்க லொழுக லென்றிவை
ஆய்ந்த நிரனிறை யாத மென்ப.''
(எது· சூ-ம்.)

**43.** அவ்வகவற்பா எத்தனை வகைப்படும்?

நேரிசை யாசிரியப் பாவும், இணைக்குற ளாசிரியப்பாவும், நிலைமண்டில வாசிரியப்பாவும், அடிமறி மண்டில வாசிரியப்பாவுமென நான்கு வகைப்படும்.

''நேரிசை யிணைக்குறள் நிலைமண் டிலமே
அடிமறி மண்டில மென்றாக வப்பாமுறை
நான்காய் வகுத்தனர் தீந்தமிழ்ப் பெரியோர்.''
(எ-து· சூ-ம்.)

அகவல் ஆசிரியம் என்பன ஒருபொருட் சொற்கள்.

i. நேரிசையாசிரியப்பா.

**44.** அந்நான்கனுள் நேரிசை யாசிரியப்பா எவ்வாறு வரும்?

ஈற்றயலடி முச்சீரடியும் மற்றை அடிகளெல்லாம் நாற்சீரடிகளுமாகப் பெற்றுவரும்.



''ஈற்றயல் முச்சீ ரடியில் நடந்து
மற்றைய வடிகள் நாற்சீர் பயின்று
நேரிசை யகவல் சீருறப் பொருந்தி
வருமெனக் கூறினர் பெருந்த நூலறிஞர்.''
(எ-து, சூ-ம்·)

(உ-ம்.) பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே.'' (௩௬)
என வரும்.

ii. இணைக்குறளாசிரியப்பா.

**45.** இணைக்குறளாசிரியப்பா எவ்வாறு வரும்?

ஈற்றடியும் முதலடியும் ஒத்து நடுவடிகளில் ஒன்றும் பலவும் ஒருசீரும் பலசீரும் குறைந்து வரும்.

''ஈற்றடி முதலடி ஒத்து நடந்து
நடுவடி தம்மில் ஒன்றும் பலவும்
ஒருசீர் பலசீர் குறைந்து பயில்வுறுமே.''
(எ-து சூ-ம்.)

(உ-ம்) ''நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து
தீரத் தீருஞ்
சார லுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.'' (௩௭)
எனவரும்.

iii. நிலைமண்டில வாசிரியப்பா.

**46.** நிலைமண்டில வாசிரியப்பா எவ்வாறு வரும்?

எல்லா அடியும் அளவொத்த நாற்சீரடிகளாகப் பெற்று வரும்.

"செய்யுள் முழுவது மளவுறு நாற்சீர்
அடியாய் நடக்கும் நிலைமண் டிலமே."

(எ-து. சூ-ம்.)

(உ-ம்) "வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே." (௫௮)

எனவரும்.

## iv. அடிமறிமண்டில வாசிரியப்பா.

**47.** அடிமறிமண்டிலவாசிரியப்பா எவ்வாறுவரும்?

எல்லா அடியும் அளவொத்து எவ்வடியை முதனடு விறுதியாகஉச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது நிற்பக் கொண்டுவரும்.

"எல்லா வடியு மளவொத் தெவ்வடி
முதனடு விறுதி யுச்சரித் தாலும்
ஓசையும் பொருளும் வழுவாது நிற்பது
அடிமறி மண்டில வாசிரி யம்மே."

(எ-து. சூ-ம்.)

(உ-ம்) "தீர்த்த மென்பது சிவகங் கையே
யேத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன் றருவே." (௫௯)

எனவரும்.

## அகவற் பாவினம்.

### (1) ஆசிரியத் தாழிசை.

**48.** அகவற் பாவினம் மூன்றனுள் ஆசிரியத் தாழிசை எவ்வாறு வரும்?



எனைத்துச் சீரானுந் தம்முள் அளவொத்த மூன்றடியதாய்த் தனித்தேனும் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியேனும் வரும்.

"எனைத்துச் சீரானுந் தம்முள வளவொத்த
மூன்றடி கொண்டு தனித்தே யியன்றும்
ஒருபொருண் மேல்மூன் றடுக்கியும் வருமே."

(எ-து. சூ-ம்.)

(உ-ம்) "சத்தமு மாகியச் சத்தத் தாற்பெறு
மத்தமு மாகலி னனந்தன் கண்களே
யுத்தம னைந்தெழுத் துருவங் காண்பன." (௬௦)

இது தனித்துவந்த ஆசிரியத் தாழிசை.

(உ-ம்) "கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ;
பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ;
கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ." (௬௧)

இஃது ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை.

### (2) ஆசிரியத்துறை.

**49.** ஆசிரியத்துறை எவ்வாறு வரும்?

எனைத்துச் சீரானும் வருமடி நான்குடையதாய் ஈற்றயலடி குறைந்தேனும் முதலடியும் மூன்றாமடியுங் குறைந்தேனும் வரும். அவ்வாறு வருமிடத்து இடைமடங்கியும் மடங்காதும் வரும்.

"எச்சீ ரானும் வருமடி நான்காய்
ஈற்றி னயலடி குறையப் பெற்றும்
முதலாம் மூன்று மடிகுறைந் தேனும்
வந்து நடக்கும் போதிடை மடங்கியும்
மடங்காதும் வருமென வகுத்தனர் புலவர்."
(எ-து. சூ-ம்.)

(உ-ம்)
"கரைபொரு கானியாற்றங் கல்லதரெம் முள்ளி வருவீ ராயி
னரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சி யகன்று போக
நரையுரு மேறு நுங்கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வௌவுத லஞ்சுதும் வார லையோ." (௬௨)

இது நான்கடியாய் ஈற்றயலடிகுறைந்துவந்த ஆசிரியத் துறை.

(உ-ம்)
இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனு
வரங்கு மணிபொழிலா வாடும் போலு மிளவேனி
லரங்கு மணிபொழிலா வாடு மாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த திளவேனில்."

இது நான்கடியதாய் இடையிடை குறைந்து இடைமடக்காய்வந்த ஆசிரியத் துறை.

## 3. ஆசிரிய விருத்தம்.

**50.** ஆசிரிய விருத்தம் எவ்வாறு வரும்?

அளவொத்த கழிநெடிலடி நான்கினால் வரும்.

"அளவுடைக் கழிநெடி லடிநான் குற்று
வரப்பெறு மென்ப ரகவல் விருத்தமே." (எ-து சூ-ம்.)

### i. அறுசீர்.

(உ-ம்) "விடஞ்சூ ழரவி னிடைநுடங்க
விறல்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன்
கதிர்வேல் பாடு மாதங்கி



வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம்
வடிக்கண் ணீல மலர்தாந்தாம்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா
மென்னுந் தன்மைத் தண்ணுமையே." (௬௪)

இஃது அறுசீர்க் கழிநெடி லடியால் வந்த ஆசிரிய விருத்தம்.

### ii. எழுசீர்,

(உ-ம்.) "கோமுனி வருக்குமரி தாய்முது மறைப்பனுவல்
கூறிய பராப்பி ரமமா
மோமெனுமெ ழுத்தின்வடி வாய்நட நவிற்றுபுலி
யூரன் மகுடச் சடிலமேன்
மாமதி யினைத்தனது கோடென வெடுப்பமத
மாமுகன் முகக்கை தொடவத்
தூமதிப் பணிப்பகையெ னவா நதிப்புகவொர்
தோணி யெனவிட் டகலுமே." (௬௫)

இஃது எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

### iii. எண்சீர்.

(உ-ம்) "அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க்
கானந்தப் பெருவாழ்வா மாடல் காட்ட
மருவருக்கன் மதிவளிவான் யமானன் றீநீர்
மண்ணெனு மெண்வகை யுறுப்பின் வடிவுகொண்ட
வொருவனுக்கு மொருத்திக்கு முருவொன் றாலவ்
வுருவையிஃ தொருத்த னென்கோ வொருத்தி யென்கோ
விருவருக்கு முரித்தாக வொருவ ரென்றே
ரியற்சொலில தெனின்யான்மற் றென்சொல் கேனே" ( )

இஃது எண்சீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

### iv. ஒன்பதின் சீர்.

(உ-ம்) "வளங்கு லாவரு மணங்க ளூர்விழி
மயக்கி லேமுலை முயக்கி லேவிழு மாந்தர்காள்
களங்கு லாவுட லிறந்து போயிடு
காடு சேர்முனம் வீடு சேர்வகை கேண்மினோ

துளங்கு நீள்சழ றழங்க வாடல்செய்
சோதி யானணி பூதியா னுமை பாநியான்
விளங்கு சேவடி யுளங்கொ ளீரமன்
விடுத்த பாசமு மடுத்த பாசமும் விலக்குமே" (சூஎ)

இஃது ஒன்பதின் சீர்க்கழிநெடிலடிலாசிரிய விருத்தம்.

### v. ஒன்பதின் மிக்க சீர்.

(உ-ம்) "கைத்த லத்த ழற்க ணிச்சி வைத்தி டப்பு றத்தொ ருத்தி
கட்க டைப்ப டைக்கி ளைத்த திறலோரா
மூத்த லைப்ப டைக்க ரத்தெ மத்தர் சிற்சபைக்கு ணிற்கு
முக்க ணக்க ருக்கொ ருத்தர் மொழியாரோ
நித்தி லத்தி னைப்ப தித்த கச்ச றுத்த டிக்க னத்து
நிற்கு மற்பு தத்த னத்தி னிடையேவே
ளத்தி ரத்தி னைத்தொ டுத்து விட்டு செட்ட யிற்க ணித்தி
லக்க ணுற்றி டச்செய் விக்கு மதுதானே."

இது ஒன்பதின் மிக்க சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

## 3. கலிப்பா.

### 51. கலிப்பாவிற்கு இலக்கண மென்னை?

கலிப்பா- வெண் சீர் மிகப்பெற்று மாச்சீரும் விளங் கனிச் சீரும் பெறாது பிறசீர்களுஞ் சிறுபான்மை கலந்து கலித்தளையும் அயற்றளையுந் தழுவி துள்ளலோசையுடைத் தாய் தரவு—தாழிசை—அராகம்—அம்போதரங்கம்—தனிச் சொல்—சுரிதகம் என்னும் ஆறு உறுப்பினுள் ஏற்பன கொண்டு, நாற்சீரடியால் வருவது கலிப்பா அனைத்திற்கும் பொதுவிலக்கணமாம்.

"வெண்சீர் மிகமா விளங்கனிச் சீர்கள்
பெறாது பிறசீர்கள் சிறுவர வாகி
கலித்தளை யயற்றளை தழுவிப் பயின்று



தரவு தாழிசை யராகத் தோடு
அம்போ தரங்கம் தனிச்சொல் சுரிதகம்
எனுமாறு றுப்பினு ளேற்பன கொண்டு
கலியோசை சிறிதும் மெலிவு பெற்றிடாது
நாற்சீ ரடியால் நடப்பது கலிப்பா." (எ-து சூ-ம்.)

### கலிப்பா ஓசை.

கலியோசை துள்ளலோசை யெனப்படும். அஃது ஏந்திசைத் துள்ளலும், அகவற்றுள்ளலும், பிரிந்திசைத் துள்ளலுமென மூவகையாம். இவை முறையே கலித் தளையான் விரவி வருவதை ஏந்திசைத் துள்ளலென்றும், வெண்டளையும் கலித்தளையும் விரவி வருவதை அக வற்றுள்ளலென்றும், கலித்தளையும் பிறதளையும் விரவிவரு வதைப் பிரிந்திசைத்துள்ளலென்றும் கூறுவர்.

### 52. அக்கலிப்பா எத்தனை வகைப்படும்?

ஒத்தாழிசைக் கலிப்பாவும், வெண்கலிப்பாவும், கொச் சகக் கலிப்பாவுமென மூன்று வகைப்படும்.

## 1. ஒத்தாழிசைக் கலிப்பா.

### 53. ஒத்தாழிசைக் கலிப்பா எத்தனை வகைப் படும்? அவையெவ்வாறு வரும்?

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா—அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா—நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா என மூன்று வகைப்படும்.

### i. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.

அவற்றுள், வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா. ஒரு

தரவு—மூன்று தாழிசை—அராகம்—அம்போதரங்கம்—தனிச்சொல்—சுரிதகம் என்னும் இவ்வாறுறுப்பும் ஒன்றன்பின் ஒன்றுறக்கொண்டு வரும். அராகமெனினும் வண்ணகமெனினும் ஒக்கும். அசையடி யெனினும் அம்போதரங்கமெனினும் ஒக்கும்.

அராக வுறுப்பானது அளவடிமுதல் எல்லா அடிகளாலும் வந்து, நான்கடிமுதல் எட்டடியளவாக வரும்.

அம்போதரங்க உறுப்பானது நாற்சீரடியாகிய ஈரடியால் இரண்டும், ஓரடியால் நான்கும், முச்சீரடியால் எட்டும், இருசீரடியாற் பதினாறுமாக வரும். சிறுபான்மை முச்சீரடி நான்கும், இருசீரடி எட்டுமாகவும் வரும்.

'வண்ணக ஒத்தாழிசைக் கலிவரு நிலையே
தரவொன் றுடனே தாழிசை மூன்றும்
அராக மம்போ தரங்கந் தனிச்சொல்
சுரிதக மெனுமா றுறுப்பும் முறையே
தோன்றி நடக்கு மென்மனார் புலவர்."

(எ-து, சூ-ம்.)

(உ-ம்) "தொல்லுலகம் படுசுடிகைச் சுடர்மணி விளக்கேந்தும்
பல்பொறிய படவரவு மடுபுலியும் பணிசெய்ய
வந்தாதுந் துபிமுழங்க வமரர்மலர் மழைசிந்த
விந்திரனு மலரவனுங் கரியவனு மேத்தெடுப்பச்
சூடகத் தளிர்ச்செங்கைத் துணைவி துணைக் கண்களிப்ப
வாடகத் திருமன்றத் தனவரத நடஞ்செய்வோய்!

இஃது ஆறடித்தரவு.

முன்மலையுங் கொலைமடங்க லீருரியு மும்மதத்த
வன்மலையுங் கடமலையின் முடையுடலின் வன்றோலும்
பொன்மலையின் வெண்முகிலுங் கருமுகிலும் போர்த்தெ [ன்ன
வின்மலையும் புயமலையின் புறமலைய விசித்தனையே



கடநாக மெட்டும்விடங் காளுக மோரெட்டுந்
தடநாக மவையெட்டுந் தரித்துள பூந்துகி லொன்று
முடனாக வடல்புரியுங் கொடுவரியி னுடம்பொன்று
மடனாக வரவல்குற் கணிகலையா வசைத்தனையே
வருநீலப் புயன் மலர மலரிதழிக் கண்ணியையு
மருநீல முயற்களங்க மகன்றமதிக் கண்ணியையுங்
கருநீலக் கண்ணியுமை செங்கைவரு கங்கையெனுந்
திருநிலக்கண்ணியையுஞ் செஞ்சடைமேற்செறித்தனையே.

இவை மூன்றும் நான்கடித்தாழிசை.

கறைவிட முகவெரி கனல்விழி யொடுமிளிர்
பிறையெயி றொடுமிடல் பெறுபக டொடுமட
லெறுழ்வலி யொடுமுரு மிடியென வருமொரு
மறலிய துயிர்கொள மலர்தரு கழலினை.

இலவிதழ் மதிநுத லிரதியொ டிரதம
துலைவற நடவிடு மொருவனும் வெருவர
வலைகட னெடுமுர சதிர்தர வெதிர்தரு
சிலைமத னனையடல் செய்நுதல் விழியினை.

உலகமொ டுயிர்களு முலைதர வலம்வரு
மலர்மகள் கொழுநனு மகபதி முதலிய
புலவரு மடிகளொர் புகலென முறையிட
வலைகடல் விடமுன மமுதுசெய் தருளினை.

விசையிலெம் மிறைவியும் வெருவர விரசத
வசலம தசைதர வடல்புரி தசமுக
நிசிசரன் மணிமுடி நெறுநெறு நெறுவென
வசையில் பொன் மலரடி மணிவிர லிறுவினை.

இவை நான்கும் அராகம்.

அருவமு முருவமு மாகி நின்றுமவ்
வருவமு முருவமு மகன்று நின்றனை.

சொல்லொடு பொருளுமாய்த் தோன்றி நின்றுமச்
சொல்லையும் பொருளையுந் துறந்து நின்றனை.

இவையிரண்டும் நாற்சீரடி யம்போதரங்கம்

(பேரெண்)

அந்நலம் விளைந்தவர்க் கறமு மாயினை
பொன்னலம் விழைந்தவர் பொருளுமானை
இன்னலம் விழைந்தவர்க் கின்புமாயினை
மெய்ந்நலம் விழைந்தவர் வீடு மாயினை.

இவை நான்கும் நாற்சீர் ஓரடியம்போதரங்கம்.

(அளவெண்.)

முத்தொழிலின் வினைமுதனீ
மூவர்க்கு முழுமுதனீ
எத்தொழிலு மிறந்தோய் நீ
இறவாத தொழிலினை நீ
இரு விசும்பின் மேயோய் நீ
எழின் மலரின் மிசையோய் நீ
அரவணையிற் றுயின்றோய் நீ
ஆலின் கீழமர்ந்தோய் நீ.

இவை எட்டும் முச்சீர் ஓரடி யம்போதரங்கம்.

(இடையெண்)

பெரியைநீ சிறியைநீ
பெண்ணுநீ ஆணுநீ
அரியைநீ எளியைநீ
அறமுநீ மறமுநீ
விண்ணுநீ மண்ணுநீ
வித்துநீ விளைவுநீ
பண்ணுநீ பயனுநீ
பகையுநீ உறவுநீ

இவை பதினாறும் இருசீர் ஓரடியம்போதரங்கம்.

(சிற்றெண்)



எனவாங்கு.

இது தனிச்சொல்.

கற்பனை கடந்தநின் பொற்கழ லிறைஞ்சுதும்
வெண்மதிக் கடவுண் மீமிசைத் தவழ்தரத்
தண்முகிற் குலங்க டாழ்வுறப் படிதலிற்
செங்கா லன்னமும் வெண்மருப் பேனமுங்
கீழ்மே றுருவ வாரழற் பிழம்பாய்
நின்றநின் றன்மையை யுணர்த்தும்
பொன்றிகழ் புலியூர் மன்றுகிழ வோனே.

இஃது ஏழடி நேரிசை யாசிரியச் சுரிதகம்.

இவ்வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவினுள் தரவு முதலிய ஆறு உறுப்புங் குறைவின்றி வந்தன.

### ii. அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.

அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா—மேற்சொல்லப்பட்ட தாழிசை முதலிய ஆறனுள் அராக மொழிந்த ஐந்து உறுப்பையுங்கொண்டு வரும். இதற்குதாரணம் மேற்காட்டிய வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவினுள் அராக மொழித்துக் காண்க.

### iii. நேரிசையொத்தாழிசைக் கலிப்பா.

நேரிசையொத்தாழிசைக் கலிப்பா—தரவுமுதலிய ஆறனுள் அராகம் அம்போதரங்க மொழிந்த நான்குறுப்பையுங் கொண்டு வரும். இதற்குதாரணம் மேற்காட்டிய வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவினுள் அராகத்தையும் அம்போதரங்கத்தையு மொழித்துக் காண்க.

## 2. வெண்கலிப்பா.

**54**. வெண்கலிப்பா எத்தனை வகைப்படும்? எவ்வாறு வரும்?

வெண்கலிப்பாவும் கலிவெண்பாவுமென இருவகைப் படும்.

## i. வெண்கலிப்பா.

வெண்கலிப்பா—கலித்தளை விரவி ஈற்றடி முச்சீரான் முடியும்.

(உ-ம்)
"சேல்செய்த மதர்வேற்கட் சிலைசெய்த சுடிகைநுதல்
மால்செய்த குழற்கோதை மகிழ்செய்ய நடஞ்செய்யும்
தருணவிளம் பிறைக்கண்ணித் தாழ்சடையெம் பெருமானின்
கருணைபொழி திருநோக்கிற் கனியாத கன்னெஞ்சம்
வாமஞ்சான் மணிக்கொங்கைக் கொசிந்தொல்கு மருங்குலவர்
காமஞ்சால் கடைநோக்கிற் கரைந்துருகா நிற்குமால்
அவ்வண்ண மாறிநிற்ப தகமென்று லகமகம்விட்
டெவ்வண்ண மாறிநிற்ப தின்று." (எ0)

## ii. கலிவெண்பா.

கலிவெண்பா- வெண்டளை தழுவி ஈற்றடி முச்சீரான் முடியும்.

(உ-ம்) 'சுடர்த்தொடீஇ கேளாய் தெருவிணு மாடு
மணற்சிற்றிற் காலிற் சிதையா வடர்ச்சியபொற்
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா வில்லுளே
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையும்



தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக் [ம்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்ட
செய்தானக் கள்வன் மகன்." (எக)

## 3. கொச்சகக் கலிப்பா.

**55**. கொச்சகக் கலிப்பா எத்தனை வகைப்படும்? எவ்வாறு வரும்?

தரவு கொச்சகக் கலிப்பா, தரவிணைக் கொச்சகக்கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, என ஐந்து வகைப்படும்.

"தரவே தரவிணை சில்பல் தாழிசை
மயங்கிசை யெனக்கோச் சகக்கலி யைவகை."
(எ-து., சூ-ம்)

## i. தரவு கொச்சகக் கலிப்பா.

அவற்றுள் தரவு கொச்சகக் கலிப்பா- தரவு ஒன்று பெற்று வருவதாம்.

(உ-ம்) "அஞ்சம்போ னடையுமையா ளகங்களிப்பச் சுரர்பரவ
நெஞ்சஞ்சேர் தருமன்பி னெறிமுனிவர் கரங்குவிப்ப
விஞ்சுஞ்சீர்த் தனித்தில்லை வியன்பொதுவி னடமாடுங்
கஞ்சந்தாழ் திருவடிகள் கருதிமட னொழிநெஞ்சே." ()

இஃது இவ்வாறு தனித்து வருதலன்றித் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வருதலுமுண்டு.

## ii. தரவிணைக் கொச்சகக் கலிப்பா.

தரவிணைக் கொச்சகக் கலிப்பா—இரண்டு தரவைக் கொண்டு வருவதாம்.

(உ-ம்) "வடிவுடை நெடுமுடி வானவற்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனும்
கொடிபடு வரைமார்பிற் கூடலார் கோமானே."
இது தரவு

எனவாங்கு. இது தனிச்சொல்.

"துணைவனைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் தொடர்புண்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோ மாறென்று [டாங்
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே."

இது தரவு.

அதனால் இது தனிச்சொல்.

"செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா ருங்கொலிஃ தெண்ணிய வாறே." (எக)

இது சுரிதகம்.

இஃது இடையிடையே தனிச்சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் முடிந்தது.

## iii. சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா- சில தாழிசைகளோடு பிறவுறுப்புக்களையுங் கொண்டு வரும்.

(உ-ம்)

"பரூஉத் தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழ
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே."

இது தரவு.

ஆங்கொருசார்

உச்சியார்க் கிறைவனா யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனைப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே.

ஆங்கொருசார்

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனைப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே.

ஆங்கொருசார்



மால்கொண்ட பகைதணிப்பான் மாதடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனைப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விமமிதராய் நின்றனரே.

இவை மூன்றுந் தாழிசை.

அஃதான்று

இது தனிச்சொல்

கொடித்தேர்த் தோன்றல் கொற்கைக் கோமான்
இன்புக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே. (எச)

இது சுரிதகம்.

இது தனிச்சொல் இடையிடைபெற்று ஒரு தரவும் மூன்று தாழிசையுஞ் சுரிதமுங் கொண்டு நேரிசையொத்தாழிசைக் கலியிற் சிறிது வேறுபட்டு வந்தது.

## iv பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா—பல தாழிசைகளோடு மற்ற உறுப்புக்களையுங் கொண்டு வரும்.

(உ-ம்) "தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடனிறையு முடன்றளர முன்னாட்கட்
கண்மதியொப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ.

இது தரவு.

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளோ.

தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ.

அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசோடு மடிவாளோ.

நாம்பிரியே மினியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ.

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா லருளுவது மருளாமோ.

சில்பசலு மூடியக்காற் சிலம்பொலிச் சீறடிபரவிப்
பல்பசலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ.

இவை ஆறுந் தாழிசை.

எனவாங்கு.

இது தனிச்சொல்.

அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே.
அதனால்,
விழுமிய தறிமதி வாழி
செழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே." (௭௫)

இது சுரிதகம்.

இது நாலடித்தரவும், இரண்டடித்தாழிசை ஆறும், தனிச்சொல்லும், நான்கடிச் சுரிதகமும் பெற்றுவந்த பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

## v. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா—தரவு—தாழிசை—அராகம்—அம்போதரங்கம்—தனிச்சொல்—சுரிதகம் என்னும் ஆறு உறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் பலவாறு மயங்கி வரும்.

"கலியுறுப் பாறு மிக்குங் குறைந்தும்
பிறழ்ந்து முறழ்ந்தும் பலவாறு மயங்கி
மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா வருமே."

(எ-து- சூ-ம்)



(உ-ம்.)

"மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூரு மேமஞ்சா றுறைவகேள்,

மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
வழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பரந்தொழுகு மேமஞ்சா றுறைவகேள்.

இவையிரண்டுந் தரவு.

கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்
[தோள்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்.

கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைய சிறுபுறத்தோ
டென்பனிநீ ருகக்கண்டுந் திரியலனே யென்றியால்

நீர்பூத்த நிரையிதழ்க ணின்றெரிசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்.

கனைகுரல்யாற் றிருகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்.

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கலாத்
தாழுமென் னிலைகண்டுந் தாங்கலனே யென்றியால்.

கலங்கவிழ்த்த நாயகன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்.

இவை ஆறுந் தாழிசை.

அதனால்

இது தனிச்சொல்.

அடும்பயி லிறும்பி னெடும்பணை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்.
அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைவரு திரையொடு கரைபொருங் கடல்
அலங்கொளி யவிர்சுட ரிலங்கொளி மலர்தொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில்.

இவை நான்கும் அராகம்.

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ.
ஒல்லாது கழலுமென் னொளிவளையுஞ் செறிப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.
தாங்காது கழலுமென் றகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.
மறவாத வன்பினேன் மனனிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.
காதலார் மார்பின்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்.
இணைபிரிந்தார் மார்பின்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

இவை ஆறுந்தாழிசை,

எனவாங்கு

இது தனிச்சொல்.

பகைபோன் றதுதுறை பரிவா யினகுறி
நகையிழந் ததுமுக மனிநா ணிற்றுளம்
தகையிழந் தனதோள் தலைசிறந் ததுதுயர்
புகைபரந் ததுமெய் பொறையாயிற் றென்னுயிர்.

இவை இருசீர் ஓரடி யெட்டம்போதரங்கம்.

அதனால்

இது தனிச்சொல்.



இனையது நினையால் அனையது பொழுதால்
கினையல் வாழி தோழி தொலையாய்
பனியொடு கழிக வுண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே." (௭௬)

இது சுரிதகம்.

இது தரவிரண்டும், தாழிசையாறும், தனிச்சொல்லும், அராகம் நான்கும், பெயர்த்தும் ஆறு தாழிசையும், தனிச்சொல்லும், இருசீரோரடியெட்டம்போதரங்கவுறுப்பும் பெற்று, நான்கடியாசிரியச் சுரிதகத்தாலிற்றுக் கலிக் கோதப்பட்ட ஆறுறுப்பும் மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் மயங்கியும் வந்தமையான் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

**56.** மேற்சொல்லப்பட்ட கலிப்பாவிற்கு உறுப்பாக வருந்தரவு தாழிசைகளுக்கு அடிவரையறையாமாறென்னை?

வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பாக்களுக்குத் தரவு ஆறடியால்வரும். மற்றைக் கலிப்பாக்களுக்குத் தரவு மூன்றடிமுதலிய பலஅடிகளால் வரும்.

தாழிசை யொன்றற்கு அடி இரண்டேனும் மூன்றேனும் நான்கேனும் வரும்.

"தாழிசை யொன்றி ரண்டே மூன்றுநான்
கடிபெற்று முடியவு மாகு மென்மனார்."

(எ-து சூ-ம்.)

## கலிப்பாவினம்.

### 1. கலித்தாழிசை.

**57.** கலிப்பாவினம் மூன்றனுட் கலித் தாழிசை எவ்வாறு வரும்?

இரண்டு முதலிய பல அடிகளால் ஈற்றடி மிக்கு ஏனை *யடி தம்முள் அளவொத்து நிற்பத் தனித்தேனும் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியேனும் வரும்.

"இரண்டு முதலாய்ப் பலவடி பெற்று
ஈற்றடி மிக்கு மேனைய வடிகள்
தம்முள வொவொத்து நிற்பத் தனித்தும்
ஒருபொருண் மேல்மூன் றடுக்கி யேனும்
வருமென வறைந்தனர் கலித்தா ழிசையே."
(எ-து. சூ-ம்.)

(உ.ம்)
"இருகூற் றுருவத் திருந்தண் பொழிற்றில்லை
யொருகூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே!
ஒருகூற்றின் கூத்தை யுணரா யெனின்மற்றப்
பொருகூற்றந் தோற்றப் புலம்பேல் வாழி மடநெஞ்சே!" ()

இது ஈற்றடி மிகுந்து தனித்துவந்த நான்கடிக் கலித்தாழிசை.

"பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே." (எஅ)

எனச் சிறுபான்மை ஏனையடிகள் ஒவ்வாது வருதலுமுண்டு.

"செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்!
முத்தேவர் தேவை முகிலூர்தி முன்னோன
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்!
ஆங்கற் பகக்கன் றளித்தருளுந் தில்லைவனப்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்!" (எகூ)

இஃது ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசை.



## 2. கலித்துறை.

**58.** கலித்துறை எவ்வாறு வரும்?

ஐஞ்சீரடி நான்கினைக் கொண்டுவரும்.

"நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை."

(உ.ம்.) "யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
றேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே." (அ0)

## 3. கலி விருத்தம்.

**59** கலி விருத்தம் எவ்வாறு வரும்?

நாற் சீரடி நான்கினைக் கொண்டுவரும்.

"நாற்சீ ரடி நான்கினைக் கொண்டு
கலிதன் விருத்தம் புலனுற நடக்கும்."
(எ...து, சூ. ம்)

(உ-ம்.) "வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலி
னேய்தலி னெண்சுட ராழியி னின்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னன்முன்
நீதலை சென்றுரை நீள்கடை காப்போய்." (அக)

என வரும்.

**60.** மேற் சொல்லப்பட்ட கலிப்பாவினுங் கலித்துறையினும் வேறுபட்டு வருங் கலிப்பாவுங் கலித்துறையு முளவோ?

உளவாம். அவை கட்டளைக் கலிப்பாவுங் கட்டளைக் கலித்துறையு மெனப் பெயர்பெறும்.

## 4. கட்டளைக் கலிப்பா.

இது முதற்கண் மாச்சீர் பெற்று நாற்சீரான் வருவது அரையடியாகவும், அஃது இரட்டி கொண்டது ஓரடியாகவும், அவ்வடி நான்கு கொண்டுவரும். அரையடிக் கெழுத்து முதலசை நேராயிற் பதினொன்றும், நிரையாயிற் பன்னிரண்டுமாம்.

"செய்யுண் முதலில் மாச்சீர் பெற்று
நாற்சீர் வருவ தரையடி யாகவும்
அஃதி னிரட்டி யோரடி யாகவும்
அவ்வடி நான்கு நிறைவுற நடக்கும்
முதலசை நேரேனிற் பதினொ ரெழுத்தும்
நிரையசை யாயிற் பன்னி ரெழுத்தும்
அரையடிக் கோதின ரருந்தமி ழறிஞர்."

(எ-து: ரூ-ம்,)

(உ-ம்)

"சொல்லி னீரிவ ராசைப்பட் டாரென்று
சொன்ன சொற்பொருள் வேறுகொண் டையையோ
புல்லு வாரெவ் விதத்தினு மென்றுளம்
பூரித் தேயிருந் தேன்மட மங்கைமீர்!
செல்லு லாம்பொழிற் கூவ நகருறை
திருவிற் கோல ரினுமரு ளாமையா
லல்ல தேது திகம்பர ரென்பொரு
ளறையின் வன்கண்ண ராவரென் மட்டுமே." (அஉ)

எனவரும்.

## 5. கட்டளைக் கலித்துறை.

இது முதற்சீர்நான்கும் வெண்டளை பிழையாமனிற்பக் கடையொருசீரும் விளங்காயாகி வரும் ஐஞ்சீரடி நான்கு கொண்டு வரும்.



அது விளங்காயாய் வருவதன்றிச் சிறுபான்மை வேறுபட்டும் வரும்.

ஓரடிக்கெழுத்து முதலசை நேராயிற் பதினாறும் நிரையாயிற் பதினேழுமாம்.

"முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாது
கடையொரு சீரும் விளங்கா யாகி
ஐஞ்சீ ரடியொரு நான்கு கொண்டு
நேர்பதி னாறே நிரைபதி னேழே
ஓரடிக் கெழுத்துச் சீருறப் பொருந்தி
நடக்கு மென்பர் செய்யுள் வல்லோரே."

(எ-து, ரூ-ம் )

(உ-ம்) "சிலைமலி வாணுத லெங்கைய தாக மெனச்செழும்பூண்
மலைமலி மார்பி னுதைப்பத்தந் தான்றலை மன்னர்தில்லை
யுலைமலி வேற்படை யூரனிற் கள்வரில் லென்னவுன்னிக்
கலைமலி காரிகை கண்முத்த மாலை கலுழ்ந்தனவே. ()

எனவரும்.

## 4. வஞ்சிப்பா.

### 61. வஞ்சிப்பாவின் இலக்கணம் யாது?

பெரும்பாலும் தன் தளையும் சிறுபான்மை பிறதளையுந் தழுவி இருசீரடியாலேனும் முச்சீரடியாலேனும் மூன்று முதலிய பல அடிகளைக் கொண்டு தனிச் சொற் பெற்றுத் தூங்கலோசை உடையதாய் அகவற் சுரிதகத்தான் முடிவதாம்.

வஞ்சி ஓசை தூங்கலோசை எனப்படும். இஃது ஏந்திசைத்தூங்கல், அகவற்றூங்கல், பிரிந்திசைத் தூங்கலென மூவகைப்படும். அவற்றுள்,

1. ஒன்றிய வஞ்சித்தளையான் வருவது ஏந்திசைத் தூங்கல்.
2. ஒன்றாத வஞ்சித்தளையான் வருவது அகவற்றூங்கல்.
3. இவ்விரண்டாலும், பிறதளையாலும் வருவது பிரிந்திசைத்தூங்கல்.

"தன்றளை மிக்கும் பிறதளை யருகியும்
குறளடி சிந்தடி யாகிய விரண்டனில்
மூன்று முதலாப் பலவடி கொண்டு
தனிச்சொற் பெற்றுச் சுரிதகம் பயின்று
வஞ்சி யோசையி லெஞ்சுத லின்றி
வருதலே வஞ்சி யிலக்கண மென்ப."

(எ...து, சூ...ம்)

### i. குறளடி வஞ்சிப்பா.

(உ-ம்.) பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவு
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்,
மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே (௮௫)

### ii. சிந்தடி வஞ்சிப்பா.

"எறிவெண்டிரைக் கடல்சூழ்புவி யெளிதெய்தினும்
இறவந்துடைப் பொழுதய்ந்திட லுளதென்னினு
அறிவின்றிறத் துயர்ந்தோர்படி றிலகின்றிலர்
அதனால்
முன்வரு மின்பினு முறைப்பட நாடிற்
பின்வரு மிடர்மிகப் பெரிதா மெனவே" (௮௬)



## வஞ்சியினம்.

### 1. வஞ்சித்தாழிசை.

**62.** வஞ்சியினம் மூன்றனுள் வஞ்சித்தாழிசை எவ்வாறு வரும்?

இருசீரடி நான்கு கொண்டது ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வரும்.

"இருசீ ரடிக ளொருநான்கு கொண்டு
ஒருபொருண் மேல்மூன் றடுக்கி வருமே."

(எ...து, சூ...ம்.)

(உ-ம்) "பிணியென்று பெயராமே
துணிநின்று தவஞ்செய்வீர்
அணிமன்ற லுமைபாகன்
மணிமன்று பணியீரே;
என்னென்று பெயராமே
கன்னின்று தவஞ்செய்வீர்
நன்மன்ற லுமைபாகன்
பொன்மன்று பணியீரே;
அரிதென்று பெயராமே
வரைநின்று தவஞ்செய்வீர்
உருமன்ற லுமைபாகன்
திருமன்று பணியீரே." (௮௮

### 2. வஞ்சித்துறை.

**63.** வஞ்சித்துறை எவ்வாறு வரும்?

இருசீரடி நான்கு கொண்டு வரும்.

"குறளடி நான்கு கொண்டு நடக்குமே."

(எ...து, சூ...ம்.)

"போறி வன்னன்
சார விருந்த
[illegible]
[illegible]." (௮௯)

## 3. வஞ்சி விருத்தம்.

**64.** வஞ்சி விருத்தம் எவ்வாறு வரும்?

முச்சீரடி நான்கு கொண்டு வரும்.

"சிந்தடி நான்கு வந்து முடிவுறுமே."

(எ...து, சூ...ம்)

(உ-ம்,) "சாந்த னோதிய தாழ்மொழி
காய்ந்த வேலிரு காதிலும்
போந்த போனறு புகுந்திட
மாந்த ராகுல மன்னினார்." (௯௦)

## 5. மருட்பா.

**65.** மருட்பா எவ்வாறு வரும்?

புறநிலைவாழ்த்து கைக்கிளை வாயுறைவாழ்த்து செவியறிவுறூஉ என்னும் நான்குபொருள் மேலும் வெண்பா முதலாக ஆசிரியப்பா ஈறாக வருனைவாம். அவற்றுள் கைக்கிளை மருட்பாவினீற்றினில் வருமாசிரியம் இரண்டே அடியினதாய் அவ்விரண்டடியுள்ளும் ஈற்றயலடி முச்சீரதாய்வரும்.

"அந்தணர் பாமுத லரசர்பா விறுதியில்
வந்து மயங்கிப் புறநிலை கைக்கிளை
வாயுறை வாழ்த்தே செவியறி வுறூஉ
எனுநாற் பொருளி னியலு மென்றே
அறிந்து கூறின ரறிந்திசி னோரே."

(எ-து. சூ-ம்)

## 1. புறநிலை வாழ்த்து மருட்பா.

(உ-ம்) தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றா னிற்காப்ப—என்றும்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே." (௯௧)



இது வழிபடுதெய்வம் நிற்புறங்காப்பப் பழிதீர் செல்வமோடொருகாலைக் கொருகாற் சிறந்து பொலிகவென்றமையாற் புறநிலை வாழ்த்து மருட்பா. இது வெண்பாவடி மிக்கும் அகவலடி குறைந்தும் வரலால் வியநிலையாயிற்று.

## 2. கைக்கிளை மருட்பா.

(உ-ம்) "திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும்—அரிபரந்த
போகித ழுண்கணு மிமைக்கும்
ஆத மற்றிவ ளகலிடத் தணங்கே." (௯௨)

இது துணிதலை நுதலிய ஒருதலைக் காமமாதலாற் கைக்கிளை மருட்பா. இதனுள் ஆசிரியவடி யிரண்டேயாய் அவற்றுள்ளும் ஈற்றயலடி முச்சீராய் வருவது காண்க. இது வெண்பாவடியும் அகவலடியும் சமமாக நிற்றலால் சமநிலையாயிற்று.

## 3. வாயுறை வாழ்த்து மருட்பா.

(உ-ம்) "பலமுறையு மோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்து
நிலமுறையி னாண்ட நிகரிலார் மாட்டும்
சிலமுறை யல்லது செல்வங்க ளில்லா
இலங்கு மெறிபடையும் வீரமு மன்பும்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்
பொலன்செய் புனைகலனோ டிவ்வாற னாலும்
விலங்கி வருங்கூற்றை விலக்கலு மாகா
தனைத்தாத லீயிருங் காண்டிர்—நினைத்தக்க
கூறிய வெம்மொழி பிழையாது
தேறினீ ரொழுகிற் சென்றுபயன் றருமே." (௯௩)

இது மெய்ப்பொருள் சொன்னமையால் வாயுறை வாழ்த்து மருட்பா.

### 4. செவியறிவுறூஉ மருட்பா.

(உ-ம்) "பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானைத் தேரோடுங் கோட்டந்து—நல்ல
தலையாலங் கானம் பொலியத்—தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக—அடுதிறல்
ஆழி நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்றும்
ஈர முடையையா யென்வாய்ச்சொற் கேட்டி
உடைய வுழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருங்கா லுழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவ ரிழைக்கும் வரைக்கா ணிதியீட்டம்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்
அமைத்த வருபொரு ளாறன்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
மன்ற மறுக வழாதி—என்றும்
மறப்புற மாக மதுரையா ரோம்பும்
அறப்புற மாசைப்பட் டேற்க—அறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி—ஒட்டார்
செவி புதைக்குந் தீய கடுஞ்சொற்—கவியுடைத்தாய்க்
கற்றார்க் கினனுகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செறுத்துநிற் சேர்ந்தாரை யாக்குதி
அற்ற மறைக்கு மறிவனாய்—மற்றும்
இவையிவை வீயா தொழுகி னிலையாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழற் றுஞ்சுவள் மன்னே" (௬௪)

இது வியப்பின்றி உயர்ந்தோர்கண் வியந்தொழுகுதல் கடனென அரசர்க்கு உரைத்தமையாற் செவியறிவுறூஉ மருட்பா. வியநிலையாயிற்று.

### vi. நூற்பா.

**66.** நூற்பா எவ்வாறு வரும்?



சில் வகை எழுத்துக்களாலாகிய சொற்றொடராய்ப் பல்வகைப் பொருள்களை விளக்கித் திட்பமும் நுட்பமும் அமைந்து வரும்.

"சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
சொல்வகை விளக்கித் திட்பழ நுட்பமுந்
செறிந்தன வாகி யோரடி முதலாய்ப்
பலவடி காறும் பயில்வுற்று வருமே."

(எ-து. நூ-ம்)

(உ-ம்.) "எழுத்தெனப் படுப
அகரமுதல்
னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே"

என வரும்.

---

## ௩. ஒழிபியல்.

ஒழிபியலென்பது முன் உறுப்பியல் செய்யுளியல்களிற் சொல்லப் பெறாது ஒழிந்து நின்ற விஷயங்களைக் கூறுவது.

ஒருசார் அடிக்குந் தொடைக்கும் எய்தியதோர் இலக்கணம்.

### க. அடி

ஒருசார் கலிப்பாவினுள்ளும் ஆசிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீரடியும் அருகி வரப்பெறுமென்று சொல்லுவர்.

### 1. கலிப்பா.

(உ-ம்) "அணிகிளர் சிறுபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர் தொட்டுழந்து மலர்தலையே" ( )

இக்கலிப்பாவின் முதலடி ஐஞ்சீர் கொண்ட அடியாக வந்தமை காண்க.

## 2. ஆசிரியப்பா.

(உ-ம்) "உமணர்ச் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்காட்
டின்னா வென்றீ ராயின்
இனியவோ பெரும தமியேற்கு மனையே." (௯௮)

இவ்வாசிரியப்பாவின் முதலடி ஐஞ்சீரடியாக வந்தமை காண்க.

## உ. தொடை.

தொடைகளுள்ளே சில ஆசிரியர் முரண் டொடையைக் கடைமுரண், கடையிணைமுரண், பின்முரண், கடைக்கூழை முரண், இடைப்புணர் முரண் எனக் கொள்வர்.

### (1) கடைமுரண்.

### நேரிசையாசிரியப்பா.

(உ-ம்) கயன்மலைப் பன்ன கண்ணிணை கரிதே
தடமுலை திவளும் தனிவடம் வெளிதே
நூலி னுண்ணிடை சிறிதே
ஆடமைத் தோளிக் கல்குலோ பெரிதே (௯௯)

இது அடிதோறும் இறுதிச்சீர் முரண் (மறுதலைப்) படத் தொடுத்தமையாற் கடைமுரண்.

### (2) கடையிணைமுரண்.

### நேரிசை யாசிரியப்பா.

(உ-ம்) "மீன்றேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் விரிசினை துழஉம்



தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
தேரோ காணலங் காண்டும்
பீரோர் வண்ணமுஞ் சிறுநுதல் பெரிதே." (௧௦௦

இஃது அடிதோறுங் கடையிருசீர்க் கண்ணும் முரண் (மறுதலைப்) படத் தொடுத்தமையாற் கடையிணைமுரண்.

### (3) பின்முரண்.

### நேரிசையாசிரியப்பா.

(உ-ம்) "சார லோங்கிய தடந்தாட் டாழை
கொய்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமிய மிருந்தன மாக நின்றுதன்
நயனுடைப் பண்மொழி நன்குபல புகழ்ந்து
வீங்கு தொடிப் பணைத்தோ ணெகிழத்
துறந்தோ னல்லனெம் மேனியோ தீதே" (௧௦௧)

இவ்வாசிரியப்பாவில் இரண்டாமடியில் இரண்டாஞ் சீரும் இறுதிச்சீருமாய் நின்ற குவிந்து விரிந்து என்பனவும் மூன்றாமடியில் இருந்தனம் நின்றுதன் என்பனவும் ஆறாமடியில் நல்லனெம் தீதே என்பனவும் தம்முள்ளே முரண்(மறுதலைப்) படத் தொடுத்தமையாற் பின்முரண்.

### (4) கடைக்கூழைமுரண்.

### நேரிசையாசிரியப்பா.

(உ-ம்) "காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா லெமக்கே" (௧௦௨)

இவ்வாசிரியப்பாவிலே முதலடியில் முதற்சீரொழிந்த மற்றைய மூன்று சீரும் முரண் (மறுதலைப்) படத் தொடுத்தமையாற் கடைக்கூழை முரண்.

### (5) இடைப்புணர் முரண்.
### வெண்பா.

(உ-ம்) "வணங்கு சிறுமருங்குற் பேரமர்க்கண் மாதர்க்
கணங்கு புரிவ தறமால்—பிணங்கி
நிணங்கானு முத்தலைவே னீள்சடையெங் கோமாற்
கிணங்காது போனு மிரவு." (௪௦௩)

இவ்வெண்பாவிலே முதலடியில் இடையிரு சீர்களாய் நின்ற சிறுமருங்குல் பேரமர்க்கண் என்பன தம்முள்ளே முரண் (மறுதலைப்)படத் தொடுத்தமையால் இடைப்புணர் முரண்.

### ௩. மோனை.

மோனைத்தொடை யமைக்குங்கால் அளவடி சிந்தடிகளுக்கு மூன்றாஞ்சீர்க்கண்ணும், நெடிலடிக்கு மூன்றாஞ்சீர்க்கண்ணும் ஐந்தாஞ்சீர்க்கண்ணும் அமைப்பது சிறப்பாகும். கழிநெடிலடிகளுள்ளே ஒருதூக்காய் வரும் அறு சீரடிக்கு மூன்றாஞ் சீர்க்கண்ணும் ஐந்தாஞ்சீர்க்கண்ணும் அமைப்பது சிறப்பு. எழு சீரடிக்கும் எண் சீரடிக்கும் ஐந்தாஞ் சீரில் வருகை நியமம்.

### ௪. எதுகை.

எதுகை—தலையாகெதுகை, இடையாகெதுகை, கடையாகெதுகை என மூவகை.

1. தலையாகெதுகை சீர்முழுதும் எழுத்தொன்றி வருவது.
2. இடையாகெதுகை இரண்டாமெழுத்துமாத்திரமொன்றி வருவது.
3. மற்றையவெல்லாங் கடையாகெதுகையென்பர். இவையன்றி ஆசெதுகை, இடையிட்டெதுகை, இரண்டடியெதுகை, மூன்றாமெழுத்தெதுகை முதலாயினவுமுள.



இவற்றிற்கு உதாரணம்: யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலவிருத்தி, செய்யுட்கோவை யாதியவற்றிற் காண்க.

### ரு. கூன்.

**67.** கூன் என்பது என்னை?

வெண்பா முதலிய செய்யுட்களின் முதலடியில் ஓரோவிடத்துப் பொருள்படத் தனித்து நிற்பதாம். அது வஞ்சிப்பாவின் முதற்கண்ணன்றி இடையிலும் இறுதியிலும் வரும்.

(உ-ம்) "உதுக்காண்,
சுரந்தானா வண்கைச் சுவானமாப் பூதன்
பரந்தானாப் பல்புகழைப் பாடி,"
எனவும்,

அவற்றுள்,
அ இ உ எ ஒக்குறிலைந்தே."
எனவும் வரும்.

யாப்பிலக்கணம் முற்றிற்று.